1168

1168

OFFICE OF THE

ஜீவகாருண்யக் கதைகள்

Rao Sahib N. C. ரங்கசுவாமி ஐயங்கார்

(ஸுபரிண்டெண்டெண்டு, எஸ். பி. ஸி. ஏ., மதராஸ்)

அவர்களால் இயற்றப்பட்டது.



"...Heavenly Father feedeth them."

"...ங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்."

0-13x
N33
78077

சிறுவர்களுக்குக்
கற்பிக்கவேண்டியவை :-

அன்பே கடவுளைக் காணும் வழி.

ஆதி கர்த்தரே அனைத்துயிர்க்குந் தலைவர்.

இயன்றமட்டும் எல்லாவுயிர்க்கும் இன்பமே செய்.

ஈ எறும்பு முதல் எல்லாவுயிரும் ஈசன் குழந்தைகளே.

உன்னைப்போலப் பிறவுயிரையும் உற்றுநோக்கு.

ஊமைப் பிராணிகளிடம் உள்ளம் இரங்கு.

எளியவையென்று எவ்வுயிரையும் இகழாதே.

ஏற்றவழிகளில் எவ்வுயிர்க்கும் உதவியே செய்.

ஐந்தில் இரக்கம் அழியும் வரையில்.

ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு காரணத்துக்காகவே உண்டாக்கப்பட்டுள்ளது.

ஓதும் இன்பம் உயிர்களிடத் தன்பால்.

ஔவை சொற்படி "தீமை யகற்று".

ஜீவகாருண்யக் கதைகள்.

Rao Sahib N. C. ரங்கசுவாமி ஐயங்கார்
(சூபரிண்டெண்டெண்டு, எஸ். பி. வி. ஏ., மதராஸ்)
அவர்களால் இயற்றப்பட்டு,

Right Honourable V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரியார்
அவர்களால் மதிப்புரை எழுதப்பட்டது.

Approved by the Text Book Committee
(*Vide* page 631, Fort St. George Gazette Part I-B, dated 15th Nov. 1932)

Second Edition

அல்பினியன் பிரஸ், வேப்பேரி,
மதராஸ்.

1933

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 8 அணா.

FOREWORD

BY

The Right Hon'ble V. S. Srinivasa Sastriar, P.C.

These stories from purana and legend, simply told and pleasingly illustrated are calculated to impress on the minds of children the claims of animals to our sympathy and kindness. The people of India enjoy a just reputation for kind treatment of bird and beast; and the Jain community are well known for the great length to which they carry their feeling of tenderness for all life. Still there is need for improvement in this respect. Shall a time ever come when the vigilance of the Society for the Prevention of Cruelty to Animals will be unnecessary? However high our civilization may be, however exalted our morality, there will always be individuals who, through greed, haste or thoughtlessness inflict injury on the dumb creatures near them. These might to some extent be controlled by men and women appointed to be on the watch. Besides, the ideas of our people on the subject require some broadening. The example of other nations has some lessons which we may well learn. This little book will, I am told, be followed by others which will serve this larger purpose. I trust the dear children who read these books will become everyday more kind, more tender and more sweet.

V. S. SRINIVASA SASTRI.

"Svagatam,"
MYLAPORE,
10th November 1932.

மதிப்புரை.

புராணத்திலிருந்தும், மற்றும் இதர மதப் பழைய கதைகளிலிருந்தும் எளிய நடையிலும், மனதைக் கவரக்கூடிய படங்களுடனும், மிருகங்கள் நமது தயைக்கும், அன்புக்கும் உரியனவாயிருக்கின்றன என்னும் விஷயங்களைச் சிறுவர்களின் மனதில் நன்கு பதியச்செய்யுமாறு இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. பறவைகளையும் மிருகங்களையும் அன்பாய் நடத்துவதில் தகுதியான புகழை இந்தியர்கள் பெற்றிருக்கிறார்கள். மேலும் ஜைன மதஸ்தர்கள் எல்லாப் பிராணிகளிடத்தும் அளவு கடந்த தயையைச் செலுத்தும் நோக்கம் உள்ளவர்களாக விளங்குவது, யாவரும் அறிந்த விஷயமே. இவ்வாறிருந்தும், இவ்விஷயமானது இன்னும் விருத்தி செய்யப்படவேண்டியதாயிருக்கிறது. ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தின் தீவிர முயற்சியே அவசியமில்லாததாக ஆகும்படியான காலமும் வரப்போகிறதா? நமது நாகரிகம் எவ்வளவு உயர்ந்ததாயிருந்தபோதிலும், இலாபத்தைக் கருதியாவது, அவசர நிமித்தத்தினாலாவது, அவிவேகத்தினாலாவது தம்மைச் சார்ந்துள்ள வாயில்லாப் பிராணிகளைத் துன்புறுத்தக்கூடியவர்களும் சிலர் எக்காலத்திலும் உண்டு. இத்தகைய ஜீவஹிம்சைகள், அவைகளைத் தடுப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் புருஷர்களாலும் ஸ்திரீகளாலும் கூடியமட்டும் தடுக்கப்படலாம். அதுவுமன்றி, இவ்விஷயத்தில் நம்மவரது நோக்கம் இன்னும் விசாலப்பட வேண்டியதாகவும் இருக்கிறது. இதர தேசத்தாருடைய செயல்களிலிருந்து நாம் நமது அனுகூலத்திற்காகக் கற்றுக்கொள்ளவேண்டிய சில விஷயங்களும் இருக்கின்றன. இச்சிறு புஸ்கமேயன்றி இவ்விஷயத்தைக்குறித்து இன்னும் விரிவாகத் தெரிவிக்கக்கூடிய வேறு புத்தகங்களும் வெளிவரப்போவதாக எனக்குத் தெரிகிறது. இப்புத்தகங்களைப் படிக்கும் அருமைக் குழந்தைகள் ஒவ்வொரு நாளும் மிகுந்த கருணையும், மிகுந்த இரக்கமும், மிகுந்த இனிய குணமும் உடையவர்களாக ஆவார்களென்று நான் நம்புகிறேன்.

வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி.

"ஸ்வாகதம்," மயிலாப்பூர்,
நொவம்பர் 10 ந்தேதி, 1932.

முகவுரை.

நன்ருய்க் கற்றுணர்ந்த ஒரு தத்துவ ஞானியை நோக்கி, ஒரு அரசகுமாரனுக்குக் கற்பிக்கவேண்டிய கல்வியை முறைப் படுத்திக் கூறும்படி ஒருவன் கேட்க அவர், "அவ்வரச குமார னுடைய இளம்பருவத்தில், முதலிற் பிராணிகளிடம் அன்பா யிருக்கக் கற்பி. ஏனென்ருல், அப்படி அன்பில்லாமல் எளிய பிராணிகளுக்குத் தீங்கு செய்வது பின்பு மனித வகுப்பின ருக்கே அன்பு காட்டும் குணத்தை யொழித்து விடும்." என்ருர்.

இச்சிறு புத்தகம், மேற்கூறிய நீதியைப் போதிப்ப வர்க்கு ஆதாரமாக எழுதியுள்ளது. அதுவுமன்றி, இது முக் கியமாக உபாத்தியாயர்கள் மாணுக்கர்களுக்கு நீதியைக் கற் பிக்கும் விஷயத்தில் உதவி செய்யுமென்றும் கருதப்படு கிறது. ஏனெனில், எதிர்கால தேச வாழ்க்கையின் நன் மைக்குக் காரண பூதர்களான எல்லாச் சிறுவர்களும் அவர் கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிருர்கள். ஆகையால், உலக முன்னேற்றத்திற்குக் காரணமான வழிகளைச் சிறுவர் களுக்கு மனத்திற் பதியும்படி போதிக்கும் மேலான பதவி யை உபாத்தியாயர்களே பெற்றிருக்கிருர்கள்.

இதிலுள்ள பாடங்களெல்லாம் சிறுவர்கள் சுலபமாகக் கற்றுக்கொள்ளுதற்கு உரிய சிறு கதைகளாக எழுதப்பட் டிருக்கின்றன.

வீட்டில் வாழும் நாய், பூனை, ஆடு, கோழி, பசு முத லிய பழகிய பிராணிகளும், சாதுவற்ற பிராணிகளெனக் கரு தப்படுகிற காட்டில் வாழும் பிராணிகளும் மனிதனுற் பக்ஷ மாக நடத்தவேண்டிய உரிமையைப் பெற்றிருக்கின்றன; மிருகங்களிடம் மனிதன் அன்பாக விருப்பது கடவுளாற் பரி சளிக்கப்பட்டு ஒருவனுடைய குணத்தை மேன்மைப் படுத் துகிறது; அதற்கு மாருகப் பிராணிகளிடம் கொடுமையாக விருப்பதோ அவனைக் கீழ்மைப்படுத்தி அன்பே யுருவா யமைந்த கடவுளிடமிருந்து அப்புறப்படுத்திவிடும் என்னும் இவ்விஷயங்கள், சிறுவர்களின் மனத்தில் நன்ருய்ப் பதியு மாறு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன.

இவ்விஷயம், சிறுவர்களுக்கு மனத்தில் எளிதில் பதியக்கூடிய இளமைப்பருவத்திலேயே கற்பிக்கத் தகுந்தது.

இதிற் காட்டியுள்ள படங்களும் சிறுவர்களின் மனத்தில் என்றும் மறவாத சிறந்த நோக்கத்தைப் பதியச் செய்வனவாயு மிருக்கின்றன.

உலகிற் சமாதானமும், எல்லாப் பிராணிகளிடத்திலும் தயையும் இருத்தல் வேண்டும்!

என். ஸி. ரங்கசுவாமி ஐயங்கார்,

பொருள் அடக்கம்.

எண்.	கதை.	பக்கம்.
1	மனுநீதிச் சோழர்	1
2	திருமூல நாயனர்	10
3	தரும புத்திரரும் நாயும் ...	12
4	நாமதேவர்	16
5	ராக்கா	18
6	சிபிச்சக்ரவர்த்தியும் புருவும் ...	21
7	ராமதாஸ்	26
8	ஆணிமாண்டவ்யர்	29
9	கபீர்தாஸர்	32
10	பணக்காரனும் பிச்சைக்காரனும் ...	35
11	சிவபெருமான் பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது	39
12	சீவகன்	42
13	நேமிநாத தேவர்	46
14	பிம்பிசாரர்	47
15	அசோகர்	51
16	மகம்மது நபியும் பூனையும்	53
17	சபக்டிஜின்	53
18	ஒரு காலுக்கு மோக்ஷம்	55
19	கிறிஸ்துவத் துறவிகளும் அவர்களுடைய மிருக நண்பர்களும்	57
20	ஸெயின்ட் அந்தோனியார்	58
21	,, அவென்டீன் டே ட்ராயிஸ் ...	60

எண்.	கதை.			பக்கம்.
22	ஸெயின்ட் கத்பெர்ட்	...	...	61
23	,, ஆண்ட்ரு டே சேனி		...	62
24	,, ஜெரோம்	...	...	62
25	,, ஜிலோம் பிர்மேட்		...	65
26	பதுவைச்சார்ந்த ஸெயின்ட் அந்தோனியார்			65
27	ஸெயின்ட் ஆன்ஸலம்	...	...	66
28	,, காட்ரிக்	...	...	67
29	,, மாலோ	...	...	68
30	,, கைல்ஸ்	...	...	70
31	,, ஹியூபர்ட்	...	...	71
32	,, பிரான்ஸிஸ்	...	...	72

ஜீவகாருண்யக் கதைகள்.

மனுநீதிச் சோழர்.

முற்காலத்திற் சோழநாட்டிற் சிறந்து விளங்கிய நகரங்களுள் திருவாரூர் என்பது ஒன்று. அந்நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழ அரசர்களும் பலர். அவர்களிற் சிறந்தவர் மனுநீதிச் சோழர். அவர், குடிகளிடத்திலும் பிராணிகளிடத்திலும் சமமான அன்புடையவர். தம் நாட்டிலுள்ள பிராணிகளுக்கு உண்டான துன்பங்களைத் தமக்கு நேர்ந்தனவாகக்கொண்டு, உடனே அவைகளை நீக்கி ஆதரிப்பார். மனிதரென்றும் பிராணிகளென்றும் பக்ஷபாதமில்லாமல் நியாயம் செலுத்துவார்.

அச்சோழ அரசருக்குப் பல வருஷங்கள் வரையில் குழந்தைகள் பிறக்கவில்லை. அதனால், அவர் மிகவும் மனம் வருந்தினார். பல தான தருமங்களைச் செய்தார். அந்நகரிற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள தியாகேசப்பெருமானையும், கமலாம்பிகை யம்மையையும் தம் குறையை நிறைவேற்றி வைக்கும்படி வழிபட்டு வந்தார். முடிவில் கடவுளருளால் அவருக்கு ஒரு ஆண் மகன் பிறந்தான். அது கண்ட அரசர் அளவிலா ஆனந்தங்கொண்டு, அக்குழந்தைக்குப் பெரியோர் அநுமதிப்படி வீதிவிடங்கன் என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தனர்.

வீதிவிடங்கன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பிள்ளைப்பருவத்தை யடைந்தான். கற்கவேண்டிய கலைகளையெல்லாம் நன்றாகக் கற்றான். நகரமாந்தர்களிடத்தில் மிகுதியும் அன்பாக இருந்தான். நகரமாந்தரும் அவனைத் தங்கள் உயிரேபோல் நேசித்துவந்தனர்.

இவ்வாறு ஜனங்களின் நன்மதிப்பைப்பெற்ற வீதிவிடங்கன் தக்க பருவத்தை யடைந்தான்.

ஒருநாள் அரசகுமாரன் தன் தந்தையின் அநுமதிபெற்றுத் தேரேறித் தோழருடன் தியாகேசப் பெருமானை வணங்கக் கோயிலுக்குச் சென்றான். அப்போது ஓர் பசுங்கன்று மிரண்டு வழிதப்பி அரச குமாரன் ஏறிச் சென்ற தேர்ச் சக்கரத்தின் கீழ் அகப்



பட்டு இறந்தது. அது தெரிந்த அரச குமாரன் இடி யோசை கேட்ட நாகம்போல நடுநடுங்கி அறிவழிந்து கீழே விழுந்தான். பின்பு சற்றுத் தெளிந்து, "கடவுளே! உன்னைக் காணவேண்டுமென்னும் பேரவாவோடு வந்த எனக்கு இப்பேரிடர் உண்டானதே; நானென்ன செய்வேன்; ஏ தியாகேசா! தயாநிதே! பிறந்தநாள் முதல் சிறு எறும்பிற்கும் துன்பம் விளைவித்து அறியேனே! ஜீவகாருண்யமே உருவாயமைந்த என் தந்தை இதைக் கேட்டால் என்ன பாடு படுவார்! ஜீவவதை என்பது இன்னதென்று அறியாத இந்நாட்டில் அரசன் மகனாகிய யானே கோஹத்தி செய்தேனே! என் வம்சத்தின் புகழையும் பெருமையையும் அழித்த பாதகனானேனே!

எல்லா மிருகங்களிலும் மிகச் சிறந்தது பசுவன்றோ! பசுவிற்கு ஒருபிடி புல்லும், ஒரு சிறு துளி நீரும் அளிப்பதாலேயே எல்லாப் பாபங்களும் நீங்குமென்று எல்லாச் சாஸ்திரங்களும் கூறுகின்றனவே! அதன் ஒவ்வோர் அவயவங்களிலும் பல தேவர்கள் வசிக்கின்றனரன்றோ! சகல ஜீவராசிகளுக்கும் ஆதிகாரணமானது ஆவன்றோ! ஆதிகாலத்தில் பசுக்களைக் காக்கப் பரந்தாமனே கிருஷ்ணனாக அவதரித்தனரென்றால் அவைகளின் பெருமையை அளவிட்டுச் சொல்லவும் கூடுமோ! ஹே ஈசனே! இத்தகைய சிறப்பு வாய்ந்த பசுவின் கன்றை நான் அறியாமற் கொன்று

விட்டேனே ; வயிறரைந்து, கண்பிதுங்கி, நாவெளிப்பட்டு விழுந்து கிடக்கும் இக்கன்றின் தாய் எவ்வாறு கதறுமோ! என்ன வருத்தத்தை யடையுமோ! இக்கன்று விழுந்துகிடக்கும் பரிதாப நிலையைக் காண என்மனம் பிளக்கின்றதே! சிறிதுநேரம் என்னைப் பிரிந்தாலும் பெருந்துயரடையும் என் தாயைப்போலன்றோ இக்கன்றின் தாயும் கதறியழும்! அம்மாவென்று அழைத்து அருகில் வந்து நக்கிக்கொடுத்துத் தன் கன்று மகிழ மகிழும் தாய்ப் பசுவின் துயரத்தை யெவ்வாறு ஆற்றப்போகின்றேன்! அரசகுமாரனைப் பிறந்தது ஆவின் கன்றைக்கொன்ற பாதகனென்ற பெயரைப் பெறுவதற்கோ! தருமமே உருவெடுத்தாற்போன்ற என் தந்தையின் முகத்தில் எவ்வாறு விழிப்பேன். இனி அவருக்கு இச்சமாசாரம் தெரியுமுன்பாக, நாமே இறப்பதைவிடச் சிறந்த வழி வேறில்லை" என்று பலபடியாக வருந்தினன்.

இவ்வாறு வருந்திக் கிடக்கும் அரச குமாரனைக் கண்ட மந்திரிகள், "இளவரசே! அறியாமற்செய்த ஒரு சிறு பிழைக்கு இவ்வாறு வருந்துவார்களோ! நீர் வேண்டுமென்று இக்கன்றைக் கொன்றீர்! இன்று இக்கன்றுக்கு விதி முடிந்ததால் இறந்ததேயன்றி, அதற்கு நீரா காரணம்! ஆதலால் இவ்வற்ப விஷயத்திற்குப் பிராணனை விட்டுவிடத் துணிவது சரியன்று! ஆயினும், அறியாமற்செய்த இப்பாபத்திற்கு உரிய பிராயச்சித்தங்களைச் செய்யலாம்! எழுந்திரும்" என்று சொன்னார்கள்.

அதுகேட்ட வீதி விடங்கன், "அறிவிற்சிறந்த பெரியோர்களே! நியாயத்திலிருந்து தவறாத நீங்களும் இன்று நியாய விரோதமாகக் கூறுவது எனது கால வித்தியாசமேயாகும்! எனக்கென்றால் நியாயம் வேறாகுமா? வெருண்டு வந்த கன்றைக் காப்பாற்றவேண்டிய நான் என் கர்வத்தால் தேரிலிருந்து கொன்றேன். அரசன் பசுக்களைக் காக்கவேண்டியவன் ; அவனே அதைக் கொன்றால் அவனுக்குப் பிராயச்சித்தமுண்டோ? ஆதலால், என் எண்ணத்தை நிறைவேற்ற அனுமதி தாருங்கள்" என்று கண்களில் நீர் பெருகக் கூறினன்.

இவர்கள் இவ்வாறிருக்குஞ் சமயத்தில் இறந்த கன்றின் தாய்ப்பசுவும் தன் கன்றைக் காணமல் தேடியலைந்து வருந்தி அங்கு வந்து சேர்ந்தது. இறந்து விழுந்து கிடக்குந் தன் கன்றைக் கண்டது. சோகத்தினல் அலறிக் கீழே விழுந்து மூர்ச்சித்தது. சிறிது தெளிந்து எழுந்து, கன்றைநோக்கிக் கண்ணீர் உகுத்தது. ‘ காக்கைக்குந் தன் குஞ்சு பொன் குஞ் சன்ருே’! அதற்கு இன்னதுசெய்வதென்று தோன்றவில்லை. சிறிதுநேரம் திகைத்து நின்றது. இறந்த கன்றை யேக்கத் தோடு நோக்கி, “ஐயோ! என் செல்வமே! சிறிதுநேரத் துக்குமுன் துள்ளிக் குதித்து ஓடினையே! அப்போது உன் வால் நின்ற நிலையைக் கண்டு களித்தேனே! என் கண்ணே! என்ன செய்வேன்! உன்னைப்பெற நான் நோற்றநோன்பும் கணக்கிலதே! இத்தியாகேசர் கோயிலைப் பிரதக்ஷிணம் செய்த நாட்கள் கணக்கிலும் அடங்காவே! ஏ தியாகேசா! என் பால் முழுவதையும் உன் அபிஷேகத்திற்கே கொடுத் தேனே! அதற்குப் பலனே இத்துயர் எனக்கு நேர்ந்தது! நான் யாருக்கு என்ன பாவஞ் செய்தேன். ஐயோ! என் குழந்தை பெரிய விருஷபமாகித் தியாகேசரின் வாகனம் போல வீதியில் உலாவுவான் என்றல்லவோ எண்ணியிருந் தேன்! என் எண்ணமெல்லாம் வீணுயிற்றே! ஹே சங்கரா! இத்துயர்காணவோ யான் இதுவரையில் இருந்தேன்” என்று பலவாறு கதறிற்று.

பின்பு அது தன் கன்றினருகில் சென்று அதை உற்று நோக்கிற்று. தேர்ச் சக்கரத்தால் அரைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பின்னும் அலறி, “ஐயோ! இதென்ன அநியாயம்! உன்மேல் தேரையோட்டத் துணிந்த பாவி எவனே! ஹா! உன் மெல்லிய தேகத்தின்மேல் மலைபோன்ற தேர் ஓடும் போது என்ன பதைத்தனையோ! அம்மாவென்று அரற்றி னையோ! பாவியாகிய யான் உன்னைப் பிரிந்து நின்றுவிட் டேனே! என் கண்ணே! உன் கதி தேரிலகப்பட்டு இறக்க வென்ருே இருந்தது! உன்னை இக்கதியிற் கண்டும் என்னு யிர் போகவில்லையே! இனி யாரை அன்போடழைப்பேன்! யாருக்குப் பால் தருவேன்! கண்ணே! நீ காலையிலும் மாலையிலும் பால் குடிக்கும்போது எனக்குண்டான பேரா

னந்தத்தை இனியான் யாரிடம் பெறுவேன்! உன் அழகிய முகத்தை எங்குக் காண்பேன்! செல்வமே! உன் நன்மைக் காக நான் எவ்வளவு பாடுபட்டேன். தாயில்லாக் குழந்தை களுக்கெல்லாம் பால் கொடுத்துக் காப்பாற்றினேனே! வியாதியோடு இருக்கும் அனேகருக்கு என்பால் ஆகாரமாக வில்லையா!

ஐயோ! கொலையில்லா இப்புண்ணிய நகரில் கொலை நிகழவும் காலமுண்டாயிற்றே! அரசனழிந்தானோ! ஒரு மனிதனைக் கொன்றால், எத்தனை போலீஸ்! எத்தனை கோர்ட்டு விசாரணை! நீதிமுறையெல்லாம் நெருப்பிலழிந்த னவோ? என் குழந்தையைக் கொன்ற கொடிய பாவியைத் தண்டிக்கத் தக்கவர் இங்கு ஒருவரும் இல்லையோ? இத்து யரை யாரிடம் சொல்வேன்! ஐயோ! இன்றைக்கு யான் யார் முகத்தில் விழித்தேனோ! திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை செய்யவேண்டும்! அத்தெய்வமும் இன்று என்வரை யில் எங்கோ சென்றுவிட்டதே!" என்று ஏங்கிற்று.

பிறகு அது ஒருவாறு தேறி, "குடிகளுக்கு உற்ற குறை யைத் தீர்ப்பவர் அரசர் அன்றோ! அவரிடத்தில் நமது குறையைக் கூறினால் அவர் தகுந்த நியாயங் கூறிக் குற்றஞ் செய்தவ னைத் தண்டிப்பார்" என்று நினைத்து, அரசன் அரண் மனைவாயிலிற்சென்று அங் குக்கட்டியிருந்த ஆராய்ச்சி மணியின் கயிற்றைத் தன் வாயினால் இழுத்து அசை த்தது.



மணி யோசை கேட்ட சோழவரசர் திகிலடைந்தார். என்ன நேர்ந்ததோ என்ற அச்சத்துடன் வெளியில் ஓடிவந்தார். மந்திரிகளை நோக்கி வினவினர். ஆனால், அவர்கள் இன்னசொல்வதெனத் தெரி யாதவராய்ப் பயமும் வருத்தமும் தோன்ற நின்றார்கள்.

அவர்களில் வயது முதிர்ந்த ஒருவன் அரசனைப் பார்த்து, "அரசே! இன்று இளவரசர் தேரேறித் தேவ சந்நிதிக்குச் செல்லுகையில், இப்பசுவின் கன்று அத்தேரின்கீழ் அகப் பட்டு இறந்தது. அத்துயர் தாளாத இது நியாயம் பெற வேண்டி இம்மணியை அசைத்தது;" என்று கூறினான்.

அம்மொழிகள் அரசர் காதுகளில் காய்ச்சிய இரும்பு போல் நுழைந்தன. அவருக்கு மதிமயக்கம் உண்டாயிற்று. பின்பு, சற்றுத் தேறுதலடைந்து, "ஹே பசுவே! உனக்கோ இவ்விடர் உண்டாயிற்று! நியாயம் பெறவேண் டியோ இங்கு ஓடிவந்து இம்மணியை யடித்தாய்! ஐயோ! உன் கஷ்டத்தைக் காண என் மனம் சகிக்கவில்லையே! இது வரையில் அகால மரணமே இல்லாத இந்த நாட்டில், இவ் வாறு நிகழவும் நேர்ந்ததே! நான் பலநாள் பிள்ளையில்லா திருந்து வருந்திப் பெற்றதும் இப்பழியைப் பெறுவதற்கோ! ஹா கடவுளே! குற்றமற்ற மனுக்குலத்திற்கும் ஓர் பழி யுண்டாயிற்றே! இனி என்ன செய்வேன்! எவ்விதம் இக் காராவின் கண்ணீரைப்போக்குவேன்! ஹே வீதிவிடங்கா! இப்பழியைத் தருவதற்கோ நீ என் வயிற்றில் வந்து பிறந் தாய்! கோயிலுக்குச் செல்கின்றவர் தேரேறியும் செல்ல வேண்டுமோ! கால் நடையாக நடந்து சென்றால் அக்கட வுள் காட்சி தரமாட்டாரா! ஐயோ! நீ கற்றதும் கேட்ட தும் இத்தகைய தீவினை செய்யவோ! ஹா! யாரை நொந்து யான் என்ன செய்வது! இதெல்லாவற்றிற்கும் காரணம் என் தலைவிதியே!" என்று கலங்கினார்.

அரசர் வருந்தக் கண்ட மந்திரிகள், "அரசே! உமது குமாரர் அறிந்திழைத்த குற்றமன்றிது! அவர் எவ்வளவோ ஜாக்கிரதையாகச் சென்றும், விதிவசத்தால் இவ்வாறு சம்ப வித்தது. இதையோர் பொருட்படுத்தி, இப்படி வருந்து வது நல்லதன்று. இனிப் பெரியோர் கூறிய முறைப்படி கோஹத்தி செய்தவருக்குள்ள பிராயச்சித்தத்தை உமது குமாரருக்குச் செய்விப்பதே தகுந்தது" என்றனர்.

மந்திரிகள் கூறிய நியாயத்தைக் கேட்ட அவர், "அமைச்சர்களே! இதென்ன விபரீதம்! இதுவரையில் நியாயம் பிறழாது எனக்குப் புத்திமதிகள் கூறி மனுநீதிச்

சோழன் என்ற பெயரைத் தந்த நீங்கள் இவ்வாறு கூறுவது அழகாகுமா! யான் என் மகனுக்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டால், அவன் செய்த பாபம் போனலும் போகலாம்! கன்றையிழந்து கதறி நிற்கும் இப்பசுவின் துயரம் போகுமா? நியாயம் பெறவந்த அதன் நெஞ்சம் எவ்வாறு வருந்துமோ? தகுந்த நியாயத்தைத் தீர்க்கவேண்டுவது என் கடமையன்றோ!" என்றனர்.

மந்திரிகள், "ஹே தருமப்பிரபுவே! உலகில் பிராணிகளின் அறிவு முதிர்ச்சிக்குத் தகுந்தபடி பாவ புண்ணியங்கள் ஏற்பட்டிருக்கின்றனவேயன்றி வேறுண்டோ! ஒரு மனிதன் மற்றொரு மனிதனைக் கொலைசெய்தால் அவனைக் கொலை செய்யும்படி நியாயங்கள் கூறுகின்றன. மிருக ஜாதியைச் சார்ந்த பசுவைக் கொன்றவனுக்குப் பிராயச்சித்தமே பொருத்தமானது; வேறு தண்டனை அவசியமில்லை. வழக்கும் சாஸ்திரமும் அப்படியே கூறுகின்றன" என்று கூறினர்.

அரசர்:—"அறிஞர்களே! நீங்கள் கூறிய நியாயம் நன்றாக இருக்கிறது! மனிதனைக் கொன்றால் கொலைத் தண்டனையும், மிருகத்தைக் கொன்றால் பிராயச்சித்தமும் செய்வதா முறை? ஒவ்வொரு பிராணியிலும் கடவுள் மறைந்து வசிக்கின்றார் என்பது நீங்கள் அறியாததோ! மனிதர்மட்டுந்தானா கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டவர்? மற்றைய மிருகம் முதலிய பிராணிகள் யாரால் படைக்கப்பட்டன? இவ்வுலகத்து உயிர்களெல்லாம் கடவுளின் குழந்தைகளன்றோ! அவருடைய குழந்தைகள் பக்ஷபாதமாக நடத்தப்பட்டால் அவர் சகிப்பாரா? கன்றையிழந்து கதறியழுது நியாயங் கேட்க வந்த இப்பசு மனிதனைவிட எவ்வகையில் குறைந்தது? எந்தவிடத்தில் இம்மாதிரி மிருகங்கள் நியாயம் பெற வந்திருக்கின்றன? ஆதலால் இப்பசுவைச் சாதாரண மிருகங்களில் ஒன்று என்று நினைக்கமுடியாது" என்று கூறினர். அப்பால் அவர் கலா வல்லபன் என்னும் மந்திரியை நோக்கி, "கோஹத்தி செய்த வீதிவிடங்கனை என் மகனென்றெண்ணாமல் இப்பசுவின் கண்காணத் தேர்க்கீழ் இட்டுக் கொலை புரியும்" என்றனர். மந்திரிக்கு அச்சொற்கள் நாராசம்போன்றிருந்தன. அவன், அரசன் ஆஞ்ஞையை மீறி நடக்கப்பயந்து,

" ஐயோ! இக்கொடுந் தொழிலைச்செய்ய நானே ஆளானேன்! அரச குமாரனைக் கொல்லுந் தொழில் எனக்கோவாயிற்று! குற்றமற்ற அக்குழந்தையை எவ்வாறு கொல்வது! மாட்டேனென்றால் அரசருக்குக் கோபம் வரும்! 'இருதலைக் கொள்ளி எறும்புபோல்' இவ்வாறு வருந்துவதைவிட நம் முயிரை விடுவதே நல்லது" என்று எண்ணி, பசுவின் கன்று விழுந்து கிடக்கும் இடத்துக்குச்சென்று உடைவாளால் குத்திக்கொண்டு தன் பிராணனை விட்டான். மந்திரி இறந்த செய்தி கேட்ட அரசர், " ஐயோ! கடவுளே! என்னை இப்படியும் வருத்தலாமா! யாரைச்சொல்லி என்ன பயன்! பசுங்கன்றுக்கு மைந்தனையும், மந்திரிக்கு என்னுயிரையும் கொடுப்பதே இனிச்செய்யத்தக்கது" என்று தீர்மானித்தார்.

இதற்குள் வீதிவிடங்கனுக்கு அரண்மனையில் நடந்தவைகளெல்லாம் தெரிந்தன. அவன் தன் பிதாவின் கட்டளையை யெதிர்பார்த்துக்கொண்டு இருந்தான். அச்சமயத்திற் சேவகர்கள் அரசன் கூறியதை அவனுக்குக் கூறி, அவனை அரசனிடம் அழைத்துச் சென்றனர். தன்முன் ஒதுங்கி நிற்கும் வீதிவிடங்கனை, அரசர் முகநோக்காமல் மறுபுறந் திரும்பிக்கொண்டு, " இன்று அஜாக்கிரதையினால் பசுவின் கன்றைத் தேரின்கீழ்க் கொன்றதனால் இவன் கொலைப் பாதகம் செய்தவனாகிறான். அதுவிஷயமாக என்முன் பிராது செய்யப்பட்டு, அது உண்மையென ருசுப்படுத்தப்பட்டது. அதனால் இவன் அத்தாய்ப்பசுவின் கண்காணத் தேர்க்கீழ் அரைக்கப்படவே, வேண்டியவனாகிறான்" என்றனர்.

தனது பிதாவின் நியாயத்தைக்கேட்ட வீதிவிடங்கன் அவர் பாதங்களில் பணிந்து, " தந்தையே! யான் கோஹத்தி செய்தது உண்மையே! அதற்காக நான் அப்போதே என் பிராணனை விட்டுவிட நினைத்தேன்; ஆனாலும், தேவரீரது கட்டளையின்படி நடக்கவேண்டுமென்ற விருப்பத்தினால் இது வரையில் உயிருடன் இருந்தேன்" என்றனன்.

உடனே மனுநீதிச் சோழர் சேவகர்களைப் பார்த்துத் தேரைச் சித்தப்படுத்தும்படி கூறினர். இதற்குள் இச்சமாசாரம் அரண்மனை முழுவதிலும் பரவிற்று. யாவரும் அழுது

கலங்கினர். வீதிவிடங்கனின் தாய் ஓடிவந்து பிள்ளையைக் கட்டிக்கொண்டு கோவென்று அலறினாள். வீதிவிடங்கன் அவர்களுக்கெல்லாம் சமாதானம் கூறினான். இதற்குள் தேர் சித்தப்படுத்தப் பட்டு வந்து நின்றது. அரசர் அதில் ஏறிக்கொண்டு கன்று இறந்துகிடந்த இடத்திற்குச் சென்றார். அந்தப் பசுவும் அவருடன் சென்றது. வீதிவிடங்கன் கன்றிருந்த இடத்தில் மல்லாந்து படுத்துக்கொண்டான். அவன்மேல் தேர் வேகமாகச் சென்றது. அதுகண்ட யாவரும் கண் புதைத்து வாய்விட்டுக் கதறினர். வீதி விடங்கன் உயிரிழந்தான்.

பிறகு மனுச்சோழர் தேரினின்றிறங்கி, மந்திரிக்காகத் தன்னுயிரைவிடக் கத்தியை எடுத்துக் குத்திக் கொள்ளப் போனார். அப்போது அது சகிக்காத தியாகேசர் கமலாம்பிகையோடும் விருஷபத்தின்மேல் தோன்றி, "சோழவரசனே! உன் ஜீவகாருண்யத்தைக் கண்டு மகிழ்ந்தேன். உன் தன்மையை உலகுக்குக் காட்ட நாமே இச்சம்பவங்களைச் செய்தோம். இனி இறந்த பசுவின் கன்றும், மந்திரியும், உன் மகனும் உயிர்பெற்றெழுவார்கள். நீங்கள் யாதொரு துன்பமுமில்லாமல் உலகமெங்கும் ஜீவகாருண்யம் தழைத்தோங்க உலகையாளக்கடவீர்" என்று கூறிக் காட்சி கொடுத்து மறைந்தனர்.

கடவுள் கிருபையால், இறந்த யாவரும் பிழைத்தெழுந் தனர். அது கண்டு யாவரும் மகிழ்ந்தனர். மனுச்சோழ ரின் மனவுறுதியையும் பக்ஷபாதமில்லாத நியாயத்தையும் பிராணிகளிடத்துள்ள அன்பையும்பற்றிக் கொண்டாடினர். தேவர்கள் பூமழை பொழிந்தனர். காராம்பசுவும் கன்றுடன் களிப்போடு சென்றது. மனுநீதி மன்னரும் வீதி விடங்க ரேடு கலாவல்லபன் முதலிய மந்திரிமார்கள் புடைசூழ்த் தியாகராஜப்பெருமானை வணங்கி அரண்மனைக்குச் சென்றார்.

சகோதர சகோதரிகளே !

ஓர் கன்றைத் தம் குமாரன் தற்செயலாகக் கொன்ற மைக்காக மனுநீதிச்சோழர் அவனுக்குக் கொலைத் தண்ட னையாகிய கொடிய கட்டளையையிட்டுத் தம் அரசாட்சி தரு மத்தை நிலைநிறுத்த விரும்பினர். ஆனல், இக்காலத்திலோ பல கன்றுகள் தினந்தோறும் வீதிகளில் வயிற்றுக்கில்லாமல் இறக்கின்றன. அவ்வாறு இறந்த பின்பு அவைகளின் தோல் பசுக்களுக்குமுன் வைக்கப்பட்டுப் பால் கறக்கப்படுகின்றன. இத்தகைய அநீதியான காட்சியை ஜனங்கள் பிரத்தியட்ச மாகப் பார்த்திருந்தும் அக்கொலையைத் தடுப்பதற்கான வழி யொன்றும் கையாளாமற் சகித்துக்கொண்டிருக்கின்றனர். தருமம் என்பது இக்காலத்தில் எங்குள்ளதோ ?

"தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணர் பழிபாவம்—பாற்பட்டா
ரேற்றவா யின்புற்று வாழ்வன வீடழியக்
கூற்றவாச் செய்யார் கொணர்ந்து"—(சிறுபஞ்சமூலம்).

திருமூல நாயனர்.

சிவபிரானது ஆலயக் காவலரில் முதன்மை பெற்றவர் நந்திதேவர். அந்நந்திதேவரது மாணக்கர்களாகிய சிவயோகி யர்களுள் ஒருவர், தெற்கே பொதிய மலையில் வீற்றிருந்த ருளும் அகத்திய மகா முனிவரைக் காணவேண்டுமென்னும் விருப்பாற் கைலாசத்தைவிட்டுத் தென் திசை நோக்கிப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தனர். அவர் இடைவழி

யிற் பலதலங்களைத் தரிசித்து ஒருநாள் சாத்தனூர் என்னும் ஊரை யடைந்தார். அங்குக் காவிரியாற்றங் கரையிலுள்ள வனமொன்றில் பசுக்கள் புல் மேய்வதுமின்றிக் கூக்குரலிட்டு

அழுவதைக் கண்டார். காணவே அவர் மனத்தில் தானாக அருளுண்டாக, அவர் அவைகளிருந்த இடத்திற்குச் சென்றார். அங்கு அப்பசுக்களுக்கிடையில் இடையனொருவன் இறந்துகிடப்பதைப் பார்த்து, அவன் அவைகளை மேய்ப்பவனென்றும், அவன்பெயர் மூலன் என்றும், அவன் இறந்தமைக்காக அப்பசுக்கள் அழுகின்றன என்றும் அறிந்தார். அப்பசுக்கள் அவ்விடையனிடங்கொண்டிருந்த அன்புக்கு வியந்தார். உடனே அவருக்கு அவைகளின் துக்கத்தைப் போக்கவேண்டும் என்னும் எண்ணமுண்டாயிற்று.

அவருக்கு யோக வல்லமையினால் பரகாயப் பிரவேசம் செய்யும் சக்தி ஏற்பட்டிருந்தது. அச்சக்தியினால் அவர் தமது உடலை ஓரிடத்தில் விட்டுத் தம் உயிரை இறந்த இடையனுடலிற் புகுமாறு செய்துகொண்டார். யோகியாரின் உயிர் உடலிற் புகுந்ததும் தூங்கி யெழுந்தவனைப்போல மூலன் உயிர்பெற்றெழுந்தான். இடையன் எழுந்ததைக் கண்ட பசுக்கள் அளவிறந்த ஆனந்தமடைந்து, அவனுடலை நக்கியும், முகர்ந்தும், கனைத்தும், மிகுந்த களிப்பினாலே வாலெடுத்துத் துள்ளியும் தங்களது அன்பையும் சந்தோஷத்தையும் வெளிக்காட்டிப் பின்பு மேயச் சென்றன.

மூலனுடைய மனைவி, தன் கணவர் வழக்கம்போல் வீடு வராமல் வெளியே நின்றுவிட, அவரைத் தேடிச் சென்று பணிந்து வீட்டிற் கழைத்தாள். தாம் உண்மையான மூலன் அல்லாததனால், அவர் வீட்டிற்குச் செல்ல மறுத்

துப் பின்பு ஓர் மடத்தில் புகுந்து சிவயோகத்தில் இருந்த னர். பின்பு அவர் உலக சீர்திருத்தத்துக்கான பல நூல்களைச் செய்தருளிக் கடைசியிற் கைலாசத்தை யடைந்தார். மூலன் உடலில் தன் உயிரைப் புகச்செய்து ஜீவித்திருந்ததால் அவ்யோகியாருக்குத் திருமூலர் என்ற பெயர் வந்தது.

இதனால், பகுத்தறிவற்றவையென்று கருதப்படும் பசு முதலிய பிராணிகளும், யஜமான விசுவாசத்திற் சிறந்து விளங்குவதும், குற்றமற்ற பெரியோர்கள் உலகத்திலுள்ள பிராணிகளின் சந்தோஷத்தையே தம்முடையதாகக் கொள் வரென்பதும் முதலிய நீதிகள் விளங்கக் காணலாம்.

பசுக்களின் சந்தோஷத்திற்காகத் தம்முடலை யிழந்த பெரியோர்கள் வாழ்ந்த இந்நாட்டில், இப்போது எண்ணற்ற பிராணுதாரமான பசுக்கள் கொல்லப்படுவது மிகவும் வியக் கத்தக்கது !

"மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்போற்
செய்யு மாதவம்போற்
பின்னொரு மாதவ மில்லைகண்டா
யினிப் பேதை நெஞ்சே."—(முருகரந்தாதி)

தரும புத்திரரும் நாயும்.

தருமபுத்திரர் பாண்டவருள் மூத்தவர். அவருக்கு நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பீமன், அருச் சுனன், நகுலன், சகாதேவன் எனப்படுவர். திரௌபதி அவர்களுடைய மனைவி. முற்காலத்தில் அவர்கள் அஸ்தினு புரத்தைத் தலை நகரமாகக்கொண்டு நமது தேசத்தை ஆண்டு வந்தார்கள். அக்காலத்தில் கடவுளின் அவதாரமாக அவத ரித்திருந்த கிருஷ்ணன் பலராமன் என்ற இருவரும் அவர்க ளுக்குச் சிறந்த நண்பர்கள். கிருஷ்ணன் பாண்டவர்களுக் குப் பலவிதங்களில் நன்மை புரிந்தவர்.

ஒருநாள் தருமபுத்திரர், கிருஷ்ணனும் பலராமனும் பரமபதமடைந்த செய்தியைக் கேள்விப்பட்டார். அவரும்

அவருடைய தம்பிமார்களும் மிகவுந் துக்கித்தனர். ராஜ்யத்தையும் தம் வாழ்நாளையும் வெறுத்தனர். தாங்களும் சுவர்க்கத்திற்குச் செல்ல நினைத்தனர். உடனே அவர்கள் தம் மனைவியுடனும் வட திசை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது, அவர்கள் நாய்களில் ஒன்று அவர்களைத் தொடர்ந்து சென்றது. அவர்கள் அந் நாயோடு கங்கை முதலிய நதிகளைக் கடந்து மேரு மலையை நோக்கிச் சென்றார்நள்.

இடைவழியில் தருமபுத்திரருடைய மனைவியும் தம்பிமார்களும் ஒருவர்பின் ஒருவராக மரணமடைந்தனர். இத்தகைய துக்க சம்பவங்களைக் கண்டும், தருமர் மனஞ் சலியாமல் தம் காரியத்தின் மேலேயே கண்ணைச் செலுத்திக்கொண்டிருந்தனர். நாயும் அவரைவிடாமல் தொடர்ந்துசென்று கொண்டிருந்தது.

இவ்வாறு தருமபுத்திரர் வருவதைத் தேவேந்திரன் அறிந்தான். அவன் சுவர்ணமயமான தெய்வ விமானத்தின் மேல் ஏறிக்கொண்டு தருமர் சென்ற வழியில் வந்து நின்றான். அவன் அவரை நோக்கி, "ஓ தருமபுத்திரரே! நீர் செய்துள்ள புண்ணிய பலத்தால் உமக்குச் சுவர்க்கம் கிடைத்

திருக்கிறது. நீர் இந்த விமானத்தில் ஏறிச் சுவர்க்கத்தை யடைந்து சுகங்களை யனுபவித்திரும்" என்று கூறினான். அதுகேட்ட தருமர் தன்னோடு தொடர்ந்துவரும் நாயையும் எடுத்துக்கொண்டு அவ்விமானத்திலேறப் போனார்.

அப்போது தேவர் தலைவன் தருமரைத் தடுத்து

"இதென்ன அநியாயம்! நாய் தெய்வ விமானத்தைத் தீண்டலாமா! இது உமக்குத் தெரியாதா! இதை விட்டுவிட்டு நீர் மாத்திரம் ஏறிக்கொள்ளும்" என்றனன். அம்மொழி கேட்ட பாண்டுமைந்தர் "அமரர் வேந்தே! இந்த நாய் நான் புறப்பட்டது முதல் என்னைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது; என்னிடத்தில் மிகுந்த பற்றுள்ளதாகவும் இருக்கிறது; ஆகையால் இதைவிட்டு நான் மாத்திரம் சுவர்க்கம் செல்ல என் மனம் இடங் கொடுக்கவில்லை. என்னை நம்பிவந்த இந்நாயை நான் விட்டுச் செல்லச் சம்மதியேன். மேலும் நம்பிவந்தவரைக் கைவிடலாமா? அது எப்பாவத்தினும் பெரும்பாவமன்றோ? நாய் மிருக ஜாதியில் கடைப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் அது தன் எஜமானனுக்குச் செய்யும் ஊழியத்தைப் போல் யாரால் செய்யமுடியும்! அன்றியும் அதைப்போல் நன்றியுள்ள பிராணியு முண்டோ! வீட்டுக்குக் காவலாகவும், விளையாட்டுக்குத் தோழனாகவும், வழிக்குத் துணையாகவும் ஆவது நாயன்றி வேறுளதோ? தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த மாற்ற முடியாத நன்றியறிதலையும், விலை கொடுத்து வாங்கமுடியாத அன்பையும் நாய்க்குக் கடவுள் விரும்பியளித்துள்ளதை நீர் அறியீரோ? ஆதலால் இத்தகைய உபயோகமும் அறிவும் நன்றியுமுள்ள பிராணியை இழி

வென்று எவ்வாறு கூறத்தகும்? ஆதலால், என் நன்மை யைக்குறித்து நான் இந்நாயைவிட்டு வரமாட்டேன். எனக்குச் சுவர்க்கம் கிடைக்காமற்போனாலும் போகட்டும்" என்றனர்.

அதற்குத் தேவர்கோன், "தருமநந்தன! உம்மைத் தொடர்ந்துவந்த உமது சகோதரர்களை மாத்திரம் விட்டு வந்திரே! அது மாத்திரம் சரியோ! அம்மாதிரியே இந்நாயையும் ஏன் விட்டுவிடக்கூடாது" என்று கேட்டான். இந்திரன் கூறியதைக் கேட்ட தருமர், "அமரேசா! இறந்துபோனவர்களுடன் நான் என்னசெய்வது! 'இறந்தால் விட்டது எல்லாப் பந்தமும்' என்பது உமக்குத் தெரிந்தது தானே! இறந்தவர்களைப் பிழைப்பிக்குஞ் சக்தி எனக்கிருந்திருக்குமானால், நான் ஒருபோதும் அவர்களை விட்டுப் பிரிந்திருக்கவேமாட்டேன். என் சகோதரர்களும் எனது உயிர் நண்பர்களாகிய கிருஷ்ண பலராமரும் உயிருடனிருந்தவரையில் நான் அவர்களைக் கைவிடவில்லை. இப்போது, இந்நாய் வழியில் நேர்ந்த கஷ்ட நஷ்டங்களையுங் கவனியாது இதுவரையில் என்னுடன் உயிரோடு வந்திருக்கிறது; இப்படிப்பட்ட இந்நாயை விட்டுவிட்டு நான்மட்டும் சுவர்க்கம் புகுந்தாலும் எனக்கது நரகமேயாகும்; ஆதலால், இந்த நாயுடன் வர அநுமதிதந்தால் நான் வருகிறேன்; இல்லாவிடின் எனக்கு உமது சுவர்க்கம்வேண்டாம்" என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டனர்.

தருமபுத்திரரது மனவுறுதியையும், அவருக்குப் பிராணிகளிடத்துள்ள அன்பையும் நாயாக இருந்த தருமதேவதை கண்டது. அதன் மனம் கரைகாணுக் களிப்புக் கடலில் ஆழ்ந்தது. அது உடனே தன் நாய் வடிவத்தைப் போக்கித் தெய்வ வுருவோடு தோன்றி, "மைந்தா! உன்னைப் பரிசோதிக்க நானே நாய் உருவங்கொண்டு தொடர்ந்தேன்; பிராணிகளிடத்து உனக்குள்ள அன்பைக்கண்டு மகிழ்ந்தேன்; இனி நீசந்தோஷமாகச் சுவர்க்கம் போகலாம்" என்று கூறிற்று. பிறகு தருமர் தேவர்களைத் தொழுது,

அவர்களோடு தெய்வ விமானத்திலேறிச் சுவர்க்கஞ் சென்றனர். பார்த்தீர்களா தருமபுத்திரரின் ஜீவகாருண்யத்தை!

எஜமான விசுவாசம்.

" யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்."—(நாலடியார்.)

நாமதேவர்.

பண்டரீபுரத்தில் நாமதேவர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் அவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளி யுள்ள பாண்டுரங்கப் பெருமானிடம் மிகுந்த பக்தியுடையவர். கண்ணிற்காணும் எல்லாப் பொருள்களையும் அவர் கடவுளாகவே எண்ணுவார். அவைகளை வணக்கமுஞ் செய்வார். அவரது பக்தியின் பெருமையையும் ஞானயோக முதிர்ச்சியையும் பரிசோதிக்கக் கடவுள் கருதினார். அதனால் அவர் ஓர் நாயுருவெடுத்துப் பாகவதர்கள் வாழும் வீதிகள்தோறுஞ் சென்று, அவர்கள் கூடி யுண்ணுமிடங்களிலெல்லாந் திரியத் தொடங்கினார். அதுகண்ட மூட ஜனங்கள், நாயை வெருட்டித் துரத்தி, அது வந்ததனால் இடமெல்லாம் அபரிசுத்தமாய் விட்டதெனச் சுத்திசெய்யத் தொடங்கினர். இவ்வாறே அந்நாய் பல இடங்களுக்குச் செல்ல, அங்குள்ளவர்களும் அவ்வாறே அதை அடித்துத் துரத்தினர்.

அந்நாயோ அவர்கள் ஏமாந்திருந்த சமயத்தில் சமையலறைக்குள் புகுந்து அங்கிருந்த எல்லாப் பொருள்களையும் வாய்வைத்து எச்சிலாக்கிற்று. அங்கிருந்தார் அனைவரும் அதனைப் பிடிக்கவும், அடிக்கவும் முயன்றார்கள். இங்ஙனம் அந்த நாய் எங்குப் போனாலும் அங்கங்குத் துரத்தப்பட்டதேயன்றி, அன்பு காட்டப்படவில்லை. ஒரு கவளம் ஆகாரமுங் கிடைக்கப்பெறாமல் அது அலைந்து திரிந்தது.

இதனைக் கண்ட நாமதேவர் அதன்மேல் இரக்கங் கொண்டு, தமது கையில் ஓர் அப்பத்துண்டை வைத்துக்

கொண்டு அதற்குக் காட்டி அழைத்தார். அது அதிவேகமாக ஓடிவந்து நாமதேவர் கையிலிருந்த அப்பத்துண்டைப் பிடுங்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தது. அப்போது நாமதேவரின் ஞான முதிர்ச்சியால் பார்த்த இடமெல்லாம் அவருக்குக் கடவுளின் சொரூபமாகவே காணப்பட்டது. அதனால்

அவர் அந்நாயைக் கடவுளாகவே மதித்து, அதனிடத்திற் பக்தி பூண்டு, ஓர் கிண்ணத்தில் நெய் வார்த்து எடுத்துக்கொண்டு, "ஓ ஸ்வாமி! ஓட வேண்டாம்! நில்லும்! இதோ நல்ல நெய் கொண்டுவருகிறேன்! வீணாக முரட்டு அப்பத்துண்டை வாய்நோக உண்ணவேண்டாம்! இந்த நெய்யில் தோய்த்து ஊறவைத்து உண்பீரானால் நன்றாக இருக்கும்! அதைத் தயவுசெய்து கொண்டு வருக! நான் உமக்கு அதைப் பதஞ்செய்து தருகிறேன்! 'அதை நான் தின்றுவிடுவேனோ' என்று பயப்படவேண்டாம்! இங்கே வாரும்!" என்று குழந்தையைத் தாயார் கூப்பிடுவதுபோற் செல்வமாகக் கூப்பிட்டுக்கொண்டே அதன் பின்னே தொடர்ந்து சென்றார்.

இவரது வருகையைக்கண்ட நாயும் ஓரிடத்தில் நின்றது. நாமதேவர் அதனருகிற் சென்று, அதைத் தடவிக் கொடுத்து, தம் மடிமேல் தூக்கி வைத்துக்கொண்டார். அதன் வாயிலிருந்த அப்பத்துண்டை மெதுவாக வாங்கிச் சிறு சிறு துண்டுகளாக்கி, அவைகளை நெய்யில் ஊறவைத்து, ஒவ்வொரு துண்டாக எடுத்து நாயின் வாயில் ஊட்டினார். அந்நாயும் ஒரு சிறு துண்டும் விடாமல் தின்று, அவர் கையையும் முகத்தையும் நக்கி வாலை ஆட்டிக்கொண்டு நின்றது.

இங்ஙனம் நாமதேவர் செய்ததைக் கண்ட ஜனங்கள், அவருக்குப் பைத்தியம் பிடித்ததெனப் பரிகசித்தார்கள்.

ஆனால் நாமதேவரோ, அந்நாயிடத்தில் மிகுந்த பக்ஷமாக அப்பத்துண்டு முழுவதையும் நெய்யில் நனைத்து ஊட்டிய பிறகு அதன் சந்தோஷத்தைக்கண்டு தானும் சந்தோஷப் பட்டுக்கொண்டிருந்தார். அப்போது நாயாக இருந்த கடவுள் அவருக்குக் காக்ஷி தந்து, அவர் குணத்தைப் புகழ்ந்து மறைந்தனர்.

பிள்ளைகளே! நாமதேவர் கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப் பிராணிகளையும் கடவுளாகவே மதித்து அவைகளி டம் அன்பு காட்டியதனாலன்றோ கடவுளின் பூர்ண கிரு பைக்குப் பாத்திரராயினர். அதுபோல் நீங்களும் ஜீவராசிக ளிடத்தில் அன்பு பூண்டு, அவைகளுக்கு யாதொரு துன்ப மும் செய்யாமல் நன்மையைச் செய்யுந் நாட்டமுடையவ ராக முற்படுங்கள்.

"பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கா லப்பரத்தின்
சீராக நிற்குந் திறங்கண்டாய்"—(தாயுமானவர்)

ராக்கா.

பண்டரிபுரத்தில் ராக்கா என்ற சிறந்த குயவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியின் பெயர் பாக்கா. அவர்கள் கடவுளிடத்தில் மிகுந்த பக்தி யுடையவர்கள். தம் குலத் தொழிலின்படி அவர்கள் தினந்தோறும் மண் பாண்டங்கள் செய்து விற்று ஜீவித்து வந்தார்கள்.

ஒரு தடவை ராக்கா பல மட்கலங்களைச் செய்து, அவைகளைச் சூளை போடாமல் சில நாள் வைத்திருந்தார். அப்போது ஒரு பூனை தன் மூன்று குட்டிகளையும் அப்பானை கள் ஒன்றனுள் வைத்துக் காப்பாற்றிவந்தது. இவ்விஷ யம் ராக்காவுக்கும் அவர் குடும்பத்தாருக்குந் தெரியாது. ஒருநாள் தாய்ப்பூனை வெளியில் சென்றிருந்த சமயத்தில் ராக்கா அம்மண்பாண்டங்களையெல்லா மடுக்கிச் சூளை போட்டார். நெருப்பு நாலாபக்கங்ளிலும் பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அப்போது தாய்ப் பூனை திரும்பிவந்து, தன் குழந்தைகளைக் காணுமல் அவைகள் அச்சூளையில் அகப் பட்டுக் கொண்ட தை யூகித்தறிந்து, அச்சூளையைச் சுற் றிச்சுற்றிக் கத்திக் கதறிற்று. அப்பூனை யின் செயலைக் கண் ட ராக்கா சிறிது யோசித்து, "ஒரு வேளை இதனுடைய குட்டிகள் இச்சூளையில் அகப்பட்டுக்கொண்டிருக்கலாம்; அதனுல்தான் இப்பூனை இப்படிக் கத்துகிறது" என்று தீர் மானித்தார். அவருக்கு ஆற்றமுடியாத துயரம் உண்டா யிற்று. அவர் வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, "ஐயோ! என்ன செய்வேன்! அறியாமல் இப்பூனையின் குழந்தைகளை அக்கினிக்கு இரையாக்கிவிட்டேனே! இப்பூனை மறுபடியும் தன் குட்டிகளைக் காண முடியுமோ! இதன் துயர நிலையைக் காண என் மனஞ் சகிக்கவில்லையே! இப்பூனையை எவ்வாறு மகிழ்விப்பேன்! இதன் குட்டிகளை எங்குச்சென்று கொண்டு வருவேன்!" என்று பலவாறு பிரலாபித்தார். அதற்குள் அவருடைய மனைவியும் அங்குவந்து விஷயத்தை யறிந்து தானும் துக்கித்தாள்.

பிறகு ராக்கா கடவுளைத் தியானித்து, "ஹே பண்டரி நாதா! ஆபத்சகாயா! அனுதரக்ஷகா! அன்று, அரக்குமாளி கையில் அகப்பட்டுக்கொண்ட பாண்டவரைக் காத்தருளி னீர். மற்றும், தன் தந்தையால் நெருப்பில் தள்ளப்பட்ட பிரகலாதனையும் காப்பாற்றினீர். அஃதேபோல் இன்றும் என் அஜாக்கிரதையினுல் இச்சூளையில் அகப்பட்டுக்கொண்ட பூனைக்குட்டிகளையும் காப்பது உமது கடனுகும். மேற்கூறிய

படி மனிதராசிகளைக் காப்பாற்றியது ஓர் பெருங் காரிய மல்ல. மிருகராசிகளைக் காப்பாற்றுவதுதான் உமது சிறந்த பெருமைக்குத் தக்கதாகும். இப்போது உம்மையன்றி உற்ற துணை வேறெவரையுங் காணேன்! நீரென்னைக் கைவிடின் நான் எரிவாய் நரகில் விழுந்து வருந்த நேரிடும்! சுவாமி! என்னைக் கைவிடவேண்டாம். இப்பூனைக்குட்டிகளுக்குத் துன்பம் வருவித்த இந்த அஜாக்கிரதைக் கிடமான தொழில் இனி எனக்கு வேண்டாம்! இத்தொழிலை இனிக் கனவிலும் கைக்கொள்ளேன்! இச்சமயம் நீர் எவ்விதத்திலாயினும் எங்களைக் காப்பாற்றவேண்டும்" என்று பிரார்த்தித்துக்கொண்டே அன்ன ஆகாரமின்றித் தரையில் புரண்டு அழுது கொண்டேயிருந்தார்.

அவருடைய மனைவியும் அவ்வாறே வருந்திக் கடவுளைக் கைகொடுக்கும்படி வேண்டியிருந்தாள். அச்சூளை இரண்டு இராப்பகல்கள் ஓயாமல் எரிந்து மூன்றும் நாள் தணிந்தது. அத்தாய்ப்பூனையும் அதுவரையில் எங்குஞ் செல்லாமல் அச்சூளையைச் சுற்றிச்சுற்றிக் கத்திக்கொண்டேயிருந்தது. மூன்றும் நாள் காலையில் பூனைக்குட்டிகள் தம் தாயின் குரலைக் கேட்டுத் தாங்களும் கத்த ஆரம்பித்தன. தண்ணீரும் குடிக்காமல் தரையில் விழுந்து வருந்திக்கிடந்த தம்பதிகளின் காதில் பூனைக்குட்டிகளின் குரல் விழுந்தது. அப்போது

ராக்கா பரபரப்புடன் எழுந்து, சூளையைப் பிரித்து, அதிலோர் பானையில் மூன்று பூனைக்குட்டிகள் உயிருடன் இருக்கக் கண்டார். அப்பூனைக் குட்டிகள் இருந்த பானை மட்டும் ஈரமாகவே இருந்தது. கடவுளருளால் நெருப்பு அவைகளை யொன்றுஞ் செய்யவில்லை. பூனைக்

குட்டிகளைக் கண்டவுடன் ராக்காவும் அவர் மனைவியும் கடவுளின் செயலுக்கு வியந்தார்கள். அவர் அடியார்களுக்கு உதவுந்திறத்தை நினைந்து மனமுருகினார்கள். அக்குட்டிகளைத் தங்கள் மார்போடு அணைத்து முத்தமிட்டார்கள். கண்களில் ஒற்றிக்கொண்டார்கள். பிறகு அவைகளைத் தாயிடம்கொண்டு சேர்த்தார்கள். தாய்ப்பூனையும் தன் குட்டிகளைக் கண்டு சந்தோஷத்துடன் பால் கொடுத்து அவைகளின் பசியைப் போக்கிற்று.

பின்பு ராக்காவும் அவர் மனைவியும் துன்பம் நீங்கிக் கடவுளை வணங்கி அன்னமருந்தினார்கள். அஜாக்கிரதைக்கிடமானதென்று ராக்கா அன்றுமுதல் தம் குலத்தொழிலை அடியோடு விட்டுவிட்டார்.

குழந்தைகளே! பூனைக்குட்டிகளுக்காக ராக்கா பட்ட துயரத்தைப் பார்த்தீர்களா! அவர் ஏன் அவ்வாறு வருந்த வேண்டும்? பூனை முதலிய சிறு பிராணிகளுங் கூடக் கடவுளாற் படைக்கப்பட்டவை யாதலால், அவைகளுக்குத் தீங்கு செய்துவிட்டோமே என்றல்லவா அவர் அவ்வாறு வருந்தினார். மேலும், பூனைகளுக்குத் தங்கள் குட்டிகளிடம் இருக்கும் விசுவாசத்தையும் அறியுங்கள்.

“ ஆருயிர் யாதொன் றிடருறு மாங்கதற்கு
ஒருயிர் போல வுருகியு யக்கொள்ள
நேரின தழுடி யாதெனி னெஞ்சகத்
தீரமு டைமை யருளினி யல்பு ”—(சூளாமணி)

சிபிச்சக்ரவர்த்தியும் புறாவும்.

அயோத்தியை யாண்ட அரசர்களுள் சிபிச்சக்ரவர்த்தியும் ஒருவர். அவர் ஒரு நாள் தன் மந்திரி முதலியவர்களும் நகர மாந்தரும் புடை சூழச் சிங்காதனத்திலமர்ந்து நகர விசாரணை செய்துகொண்டிருந்தனர். அப்போது ஓர் புறா பயத்துடன் மிகவும் வேகமாகப் பறந்து வந்து அபயமென்ற குரலுடன் அவர் மடியில் விழுந்தது. அதனுடல் முழு

வதும் காயங்கள் காணப்பட்டன. இறகுகளெல்லாம் கிழிக்கப்பட்டுக் கிடந்தன. சிபி அப்புறுவை அன்பாகப் பார்த்து "ஓ புறுவே! நீ சிறிதும் பயப்படவேண்டாம்; நான் நாட்டை யிழந்தாலும் அல்லது பிராணனையே இழந்தாலும் உன்னைக் கைவிடேன். நீ கவலையற்றிருப்பாயாக" என்று அதன் முதுகில் தடவிக்கொடுத்து, அதைத் தம் மடியிலே வைத்துக்கொண்டார்.

அவர் பேசி முடிவதற்குள்ளாகவே அப்புறுவைத்துரத்தி வந்த பருந்தும் அக்கொலு மண்டபத்தில் நுழைந்தது. அதற்கு அடங்காக் கோபம் பொங்கி யெழுந்தது. அது அரசரை நோக்கி, "மாநில மன்ன! நீர் கூறிய வார்த்தைகள் வெகு நன்று; உமக்கு ஆகாயத்தை யாளும் அதிகாரத்தை யார் கொடுத்தார்? உமது ஆட்சிக் குட்பட்ட மனிதர்களை ரக்ஷிக்கவோ அல்லது சிக்ஷிக்கவோ அதிகாரமுண்டே தவிர, ஆகாயத்தில் அலைந்து திரியும் பறவைகளைப் போற்றவும், போக்கவும் உமக்கென்ன அதிகார மிருக்கிறது? இவ்வாறு செய்வது எந்த நியாயத்தைச் சேர்ந்தது? அப்புறுவைப்போல என்னையும் நீர் நோக்கவேண்டாமா?" என்று பரபரப்புடன் பேசிற்று.

அப்பருந்தின் பேச்சைக் கேட்ட சிபி, "பருந்தே! நீ யார்? எதை நாடி வந்தாய்? எல்லாவற்றையும் நிதான

மாகத் தெரியச்சொல்" என்று கேட்டார். அப்போது பருந்து, " அரசே! நீர் இந்தப்புருவுக்கு உதவிசெய்ய விரும்புகிறீர்; அதனால் எனக்கு நேரும் துன்பத்தை யொரு சிறிதும் கவனித்திரில்லை. அப்புருவோ எனக்கு ஆகார மானது. எனக்குப் புருவின் புலால் கிடைக்காவிட்டால் உயிர் வாழ முடியாது. புருவைக் காக்கும் வியாஜத்தினால் நீர் என்னைக் கொல்லப்பார்க்கிறீர். அதோடு, நானிறந்தால் என் மனைவி மக்களை யார் காப்பாற்றுவார்? அதனால் அவர் களும் ஆதரிப்பாரற்று மரணமடைய நேரிடும். நீர் ஒரு புருவைக் காப்பதனால், யான் அழிந்து என் குடும்பமும் அழியவேண்டும். ஒரு புருவிற்காகப் பல வுயிர் இறத்தல் தருமமா! ஆகையால் இவ்விஷயம் நீர் நன்றாக ஆராய்ந்து செய்யத்தக்கதே யாகும்" என்றது.

அம்மொழிகளைக் கேட்ட சக்ரவர்த்தி, " பருந்தே! நீ கூறிய யாவும் உண்மையே! அவைகளைத் தடுத்தோ மறுத்தோ பேச ஒருவராலும் முடியாது. ஆயினும் என் னைச் சரணமடைந்த இப்புருவை உன் வாய்க்கிரையாகக் கொடுக்க நான் ஒருகாலுஞ் சம்மதியேன். சரணாகதனைக் கைவிட்ட பாதகனென்ற பெயரை நான் பெற விரும்பேன். நம்பினவரை நாசஞ்செய்தவனுக்கு எத்தனைப் பிறவிகளெடுப் பினும் நன்மை கிடைக்குமோ? அப்படிப் பட்டவனைத் தேவர்களும் பிதுருக்களுங் கூட வெறுக்கின்றனரன்றோ! அவன் என்றைக்கும் அழியாத நரகக் குழியிலன்றோ கிடந்து வருந்த நேரிடும்! ஆதலால், இப்புருவை நான் விடமாட்டேன்; ஆனால், அதற்குப் பதிலாக உனக்குப் பலவித ஆகாரங்களைத் தருகிறேன். நீயே அவைகளில் உனக்கிஷ்டமானவைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்" என்றனர்.

அதற்குப் பருந்து, " எனக்கு இப்புருவின் மாமிசமே வேண்டும்; புருக்களே பருந்துகளுக்கு இயற்கையான ஆகாரம்; புருக்களில்லாவிட்டால் எங்களால் உயிர் வாழ முடியாது; நீர் கொடுப்பதாகச் சொல்லும் ஆகாரங்களெல்லாம் இப்புருவுக்குச் சமமாகுமா? ஆதலால், என் ஆகாரத்தை என்னிடம் கொடுத்துவிடும்" என்றது. அப்போது சிபி, " ஹே பருந்தே! நீ பேசுவதில் மிகவும் சமர்த்தனென்றறிந்தேன்;

நீ என்ன சொன்னாலும் இப்புறாவைக் கொடுக்கமுடியாது. வேண்டுமானால் என் ராஜ்யமுழுவதையும், என்னையும் வேண்டினும் உனக்குக் கொடுப்பேன்" என்றார். அவ்வார்த்தைகளைக் கேட்ட பருந்து, "அரசே! ஆனால் சரி! நீர் கூறியபடியே இப்புறாவின் எடைக்குச் சரியாக உமது தேகத்திலிருந்து மாமிசம் கொடுப்பீராயின், அதை நான் சம்மதிக்கிறேன்; அதன்படி உமக்குக் கொடுக்கச் சம்மதமா?" என்று கேட்டது.

சிபிச்சக்ரவர்த்தி அம்மொழிகளைக் கேட்டு ஆனந்தமடைந்தார். தம் மனப்பூர்வமான சம்மதத்தைப் பருந்துக்குத் தெரிவித்தார். உடனே துலாக்கோல் கொண்டுவருமாறு கட்டளை யிட்டார். சேவகர்கள் துலாக்கோலைக்கொண்டு கொடுத்தனர். அரசர் ஒரு தட்டில் புறாவை வைத்தார்.

பின்பு தம்முடம்பிலிருந்து தம் கையாலேயே மாமிசத்தை அரிந்து மற்றொரு தட்டில் வைத்தார். அம்மாமிசம் புறாவின் எடைக்குச் சரியாகவில்லை. அதனால் அரசர் மேலும் மேலும் தம்முடம்பிலுள்ள மாமிசத்தையெல்லாம் அரிந்து வைத்துக் கொண்டேயிருந்தார். எவ்வளவு வைத்தும் புறாவின்எடையே அதிகமாக இருந்தது. கடைசியில் அரசருடம்பில் சிறிது கூட மாமிச மில்லாமற் போயிற்று. எலும்புக்கூடு மாத்திரமே எஞ்சி நின்றது. அவர் அப்படியே துலாக்கோலிற் புக எத்தனித்தார்.

அச்சமயத்தில் அவருடைய மனைவிமார்களும், மந்திரி, பிரதானிகளும் அங்ஙனம் செய்யவேண்டாவென்று அவரை வேண்டினர். கோவென்று கதறியழுதனர். அரசர் ஒன்

றையுங் கேட்கவில்லை. அவர் அவர்களைப் பார்த்து, "ஜனங்களே! பெரியோர்களே! என்னுடைய இச்செயல் என்னை யொருவர் கொண்டாட வேண்டுமென்றதன்று. புறவுக்காகவோ அல்லது பருந்துக்காகவோ நான் இச்செயலைச் செய்யவில்லை. ஆனால் அரசனாகிய நான் தருமத்துக்குக் கட்டுப்பட்டவன். அதை நிலை நிறுத்தவேண்டியவன். சரணம் என்று அடைந்தவரை ஆதரிப்பதைவிடச் சிறந்த தருமம் வேறில்லை. நானே என் கடமையைச் செய்யத்தவறினால் என் கீழ் வாழும் குடிகள் எவ்வாறு நடப்பார்கள்? ஆதலால் தருமத்தை நிலை நிறுத்தவே நான் இத்தொழிலைச் செய்கிறேன். இதைப்பற்றி நீங்கள் வருந்தவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே துலாக்கோலில் ஏறியுட்கார்ந்தார்.

அரசருடைய இத்தீரச் செயலைக்கண்ட தேவர் ஆகாயத்தில் ஆனந்த கோஷஞ்செய்தனர். கற்பகமலரை மழையெனச் சொரிந்தனர். அப்போது பருந்து சிபியைப்பார்த்து, "அரசே! நீரே ஜெயித்தீர்; உமது பெயர் எந்நாளும் நிலைத்து நிற்கும்; உலகத்தில் தருமமுங் காக்கப்பட்டது" என்று சொல்லி ஆகாய மார்க்கமாய்ப் போய் மறைந்தது. அதைக் கேட்ட அரசர் அருகிலிருந்த புறவைப் பார்த்து, "ஹே புறவே! இதென்ன விந்தை! இந்தப் பருந்தின் உண்மை வரலாறென்ன? நீ யார்? இவைகளை யான் அறியக் கூற வேண்டும்" என்று கேட்டார்.

அப்போது புறா அரசரை நோக்கி, "அரசே! அப்பருந்து தேவேந்திரன் எடுத்துவந்த வேற்றுருவம். நானும் உண்மையில் புறவல்லன். நான் அக்கினிதேவன். உமது சரணாகதரக்ஷணத்தையும், ஜீவகாருண்யத்தின் பெருமையையும் பற்றித்தேவ சபையில் பேச்சுண்டாயிற்று. அப்பேச்சின் உண்மையைப் பரிசோதிக்கவே நானும் தேவர்கோனும் இவ்வுருவங்களுடன் வந்தோம். உமது சரணாகதரக்ஷணத்தையும், பிராணிகளிடத்துள்ள அன்பையும் கண்டு மகிழ்ந்தோம். உம்மையொத்தவரை நாங்கள் இதுவரையிற் கண்டதேயில்லை. உமது பெயர் முக்காலத்திலும் அழியாதிருக்கட்டும். அரிந்தரிந்தெடுக்கப்பட்ட உமது உடம்பும் முன்புபோல் வலிமை பெற்று விளங்கும். நீர் உமது குடும்பத்தோடு பல நாள்

சுகமாக வாழ்ந்திருந்து முடிவில் மோக்ஷத்தை யடைவீர்" என்று கூறிவிட்டுத் தன் நிஜவுருவத்தோடு அரசருக்குக் காட்சி தந்து மறைந்தது. அரசர் அறுபட்ட இடமெல்லாம் நன்றாகப் பெற்று முன்னிலும் வலிமையோடு எழுந்தனர். அதுகண்ட நகர மாந்தர் யாவரும் ஆனந்தமடைந்து தங்கள் அரசரை வாழ்த்தினர். சிபிச்சக்ரவர்த்தியின் ஜீவகாருண்யம் மறக்கத் தகுந்ததோ!

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயி ரஞ்சும் வினை"—(குறள்.)

ராமதாஸ்.

ராமதாஸ் என்பவர் சிறந்த ராம பக்தர். நற்குண நன்னடக்கை யுடையவர். அவர் பத்ராசலம் என்ற ஊரில் இருந்தார். அக்காலத்தில் டில்லியில் மகம்மதிய அரசர் ஒருவர் ஆண்டுவந்தார். அவ்வரசர் ஆட்சிக்குப் பத்ராசலமும் உட்பட்டிருந்தது. அம்மகமதிய அரசர் ராமதாஸின் பெருமையைக்கேட்டு அவரைப் பத்ராசலத்திற்குத் தாசீல் தாராக்கினர். ராமதாஸ் சில வருஷங்கள் வரையில் தமது வேலையைச் சரிவரச் செய்துவந்தார்.

ஸ்ரீராமபிரானிட மிருந்த பக்தியின் மிகுதியால், ராமதாஸ் அவருக்குக் கோயில் கட்ட நினைத்தார். தம்மிட மிருந்த செல்வ மெல்லாவற்றையும் அக்கைங்கரியத்துக்காகவே செலவிட்டார். கோயில் கட்டி முடிவதற்குள் அவர் செல்வமெல்லாம் செலவாகிவிட்டது. அதனால் ராஜாங்க பணத்தையும் எடுத்துச் செலவுசெய்ய ஆரம்பித்தார். அது அரசனுக்குச் சேரவேண்டியதென்பதை மறந்தார். கடவுளின் காரியமே முக்கியமானது என்று கருதினர். சிலநாள்களில் ஸ்ரீராமபிரானுக்குக் கோயில் அழகாகக் கட்டப்பட்டது. உற்சவங்களையும் ராமபக்தர் அதிவிமரிசையாக நடத்தினர்.

டில்லி அரசருக்குச் சேரவேண்டிய பணம் அனுப்பப்படவில்லை. அதனால், அம்மன்னவர் தமது வேலைக்காரர்களை அனுப்பி விஷயத்தை அறிந்துவரச்சொன்னர். அவர்

கள் பத்ராசலத்திற்குச் சென்று ராமதாஸின் நடவடிக்கைகளை அறிந்து அரசரிடங் கூறினர். அம்மகம்மதிய மன்னர் அதிககோப மடைந்து, தமக்குச் சேரவேண்டிய பணத்தை வாங்கிவரும்படி தலையாரிகளை அனுப்பினர். அத்தலையாரிகள் ராமபக்தரைப் பணந்தருமாறு வற்புறுத்தினர்கள். அவர் கையில் ஓர் காசும் இல்லை. அதனால் அவர் இன்றைக்கு நாளைக்கு என்று தவணை சொல்லிவந்தார். பல நாளாகியும் பணம் வராமையைக்கண்ட டில்லி சக்ரவர்த்தி பத்ராசலம் தாசீல்தாரைப் பழித்து, செலுத்தவேண்டிய பணத்தைக் கொடுக்கும்வரையில் அவரைச் சிறையில் வைத்துப் பலவிதத்திலும் வருத்தக் கட்டளையிட்டார்.

ராமதாஸ் சில வருஷங்கள் வரையில் அப்படியே சிறைவாசம் செய்துவந்தார். சேவகர்கள் அவரைப் பலவிதத்திலும் துன்புறுத்தினர்கள். அவர் தமக்கேற்பட்ட நிலைமையைக் குறித்து மனம் வருந்தி, தமது குலதெய்வமாகிய ராமனையே கல்லுங் கரையும்படி பிரார்த்தித்திருந்தார். அவர்மேல் இரக்கங்கொண்ட ஸ்ரீராமசந்திரர் ஒரு நாள் தமது தம்பியும் தாமுமாக வேலைக்காரர்களைப்போல் வேஷந்தரித்து, தமது பக்தர் டில்லி சக்ரவர்த்திக்குச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தி மறைந்தனர். பிறகு மகம்மதிய மன்னர் ராமதாசரின் பெருமையைக் கண்டு, அவரைச் சிறையிலிருந்து விடுவித்து, தாம் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அவர் பாதங்களில் விழுந்து வணங்கினர். ராமதாஸ் ராமபிரானுடைய கருணைக்குக் களிகூர்ந்து அரசரையும் ஆசீர்வதித்து அனுப்பினர்.

“பிள்ளைகளே! ராமதாஸ் சிறந்த பக்தராக இருந்தும், அவர் அரசனால் துன்பப்படுத்தப்பட்டு, சிறைவாசமும் செய்ய நேர்ந்தது எதனால் என்பது உங்களுக்குத் தெரியுமா?

சொல்லுகிறேன் கேளுங்கள்! ராமதாஸ் முற்பிறவியில் வேடிக்கைக்காக ஒரு கிளியைப் பிடித்துக் கூட்டில் அடைத்து அதைக்கண்டு மகிழ்ந்தார். அக்கிளியோ "ஐயோ! யதேச்சையாகப் பறந்து திரியும் என்னை இப்படிக் கூட்டிலிட்டு வருத்துகின்றானே! இவன் எவ்வளவு சௌக்கியத்தைச் செய்தாலும், அவைகளெல்லாம் எனக்கு இன்பமாகுமா? என் உபத்திரவத்தைக் கண்டும் என்னை ஓட விடாமல் உளமகிழ்ந்திருக்கின்றானே! இது என்ன அநியாயம்! இவனும் இம்மாதிரி கூட்டி லடைபட்டாலன்றோ இவனுக்கு வருத்தம் தோன்றும்" என்று சாப மிட்டது. அக்கிளியின் சாபத்தின் காரணமாக ராமதாஸ் இப்பிறவியில் சிறைப்பட்டு வருந்தினார். ஆதலால், குழந்தைகளே விளையாட்டுக்காகவும், இஷ்டப்படி இன்பமாக ஓடி ஆடித்திரியும் பறவைகளைப் பிடித்துக் கூடுகளில் இட்டு வருத்தாதீர்கள். நீங்கள் அவைகளைப் பொற்கூட்டில் வைத்துப் பாலுஞ் சோறுங்கொடுத்தாலும், அவைகளுக்கு உங்கள் உபசாரங்களெல்லாம் முட்புதரில் இருந்து விஷத்தை யுண்பது போலவே இருக்கும்."

சகோதர சகோதரிகளே!

நமது அனேக திவ்யக்ஷேத்திரங்களில் இருக்குங்கோயில்களில் கிளிகளைக் கூடுகளில் வைத்திருப்பதைக் காண்பீர்கள்.

கடவுள் சன்னிதானம் அன்பு நிறைந்த இடமாகும். அப்படிப்பட்ட இடத்தில் இத்தகைய கொடியவழக்கங்கள் இருப்பது நமது ஹிந்து மதத்திற்கோர் இழிவன்றோ?

“ இரும்பார்க்குங் காலராய் ஏதிலார்க் காளாய்க்
கரும்பார்க் கழனியுட் சேர்வர்—சுரும்பார்க்கும்
காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழும்
கூட்டுளாய்க் கொண்டு வைப்பார் ”—(நாலடியார்)

ஆணிமாண்டவ்யர்.

சாளுவ தேசத்துக்கு அருகிலுள்ள ஓர் வனத்தில் மாண்டவ்யர் என்னும் தவசி ஒருவர் இருந்தார். அவர் சகல சாஸ்திரங்களிலும் வல்லவர். கடவுளிடத்திற் கனிந்த சிந்தையுடையவர். அவர் தமக்கு ஒரு பர்னக சாலை ஏற்படுத்திக்கொண்டு எப்பொழுதும் கடவுளைக் குறித்துத் தவஞ் செய்துவந்தார். அவர் தவம் செய்யும்போது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையு மடக்கிக்கண்களைத் திறந்தவண்ணமாகவே தவம் செய்வது வழக்கம்.

இவர் இவ்வாறிருக்க, ஒரு நாள் இரவு சில கள்வர் அவ்வூர் அரசன் அரண்மனையிற் களவாடிய பொருள்களை யெல்லாம் எடுத்துக்கொண்டுவந்து மாண்டவ்யருடைய பர்னக சாலையில் மறைந்திருந்தார்கள். அரண்மனை களவாடப்பட்டதை யறிந்த அரசன், சேவகர்களை யனுப்பித் திருடர்களைப் பிடித்துவரும்படி கட்டளை யிட்டான். அச்சேவகர்கள் கள்வர்களின் காலடிகளைப் பிடித்துக்கொண்டு முனிவரின் பர்னக சாலைக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கு விழித்தகண் விழித்தபடியே யோகத்திலிருந்த முனிவரை அவர்கள் களவு விஷயத்தைப்பற்றி விசாரித்தார்கள். முனிவரோ வாய் திறக்கவில்லை. அதனல் அவர்கள் மிகுந்த கோபமடைந்து பர்னக சாலைக்குள் நுழைந்தனர். அங்குத் திருடர்கள் பதுங்கி இருக்கக்கண்டு அவர்களையெல்லாம் பிடித்துக் கொண்டனர். பின்னர் முனிவரை உள்ளபடி உணராமல், ‘ அவர் அத்திருடர்களுக்கெல்லாந் தலைவராயிருக்கவேண்டும்; அதனுற்றான் தங்களுக்கு அவர் பதில் கூறவில்லை’ என்ற

தப்பெண்ணத்துடன் கட்டிப்பிடித்துக்கொண்டு அவர்கள் அரசனிடஞ் சென்றனர்.

அரசன் இழந்த பொருள்களையெல்லாம் மீண்டும் பெற்று அதைக் களவாடியவருக்குத் தக்கபடி தண்டனை விதித்தான். பின்பு அவன் யோகத்திலிருந்த முனிவரைப் பார்த்து, "சேவகர்களே! இப்பெரியார் யார்? இவரை ஏன் பிடித்துவந்தீர்கள்" என்று வினவினன். அதற்குக் காவலர், "அரசே! இவனைச் சாமானியமாக நினைக்கவேண்டாம்; இவனே முதல் திருடன். இவன் ருத்திராக்ஷப் பூனையைப் போல் இந்த வேஷத்துடன் உலகை யேமாற்றிக் களவாடுபவன். முதலில் நாங்கள் இவனைப் பெரிய மஹானென்று எண்ணி வணங்கி 'இவ்வழியாக யாராவது வந்தார்களா' என்று கேட்டதற்கு, திறந்த கண்ணுடனிருந்த இவன் பதிலொன்றுஞ் சொல்லாமல் சும்மா இருந்தான். பிறகு நாங்கள் பர்னக சாலையைப் பரிசோதிக்கத் திருடர் யாவரும் அதில் அகப்பட்டனர். ஆதலால் இவன் அத்திருடர்களுக்கெல்லாந் தலைவனாக இருக்கவேண்டும். இவனை விட்டுவிட்டால் பிறகு பெரிய ஆபத்தாக முடியும்" என்றனர்.

அவர்கள் கூறிய மொழிகளைக்கேட்ட அரசன், மாண்டவ்யரின் ஊழ்வினைப் பலத்தினல் மனம் வேறுபட்டு அவரைக் கழுவி லேற்றும்படி கட்டளையிட்டான்.

உடனே கொலையாளிகள் அவரைக் கொண்டுபோய்க் கழுமரத்தில் மாட்டி இழுத்தார்கள். முனிவரோ கழுவில் யாதொரு கஷ்டமுமின்றித் தவத்திலிருந்தார். இப்படிச்சிலநாள் கழிந்தன. ஒருநாள் ஆகாயமார்க்கமாகச் சென்ற சில தேவர்கள் மாண்டவ்யர் கழுவிலிருப்பதைக் கண்டு வருந்தி, அத்தண்டனைகொடுத்த அரசனை நிந்தித்தார்கள். அப்போது முனிவர் தேவர்களை நோக்கி, "தேவர்களே! சாளுக்கிய அரசன் சாலச் சிறந்தவன். தருமத்திற் சிறிதுந் தவறு

தவன். ஆயினும் விதியைக் கடக்க யாவரால் முடியும்" என்று கூறினர். இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த சிலர் அப்போதே அரசனிடம் ஓடித் தாம் கேட்ட விஷயங்களைக் கூறினர். அதுகேட்ட அரசன், 'கழுவி லேற்றப்பட்டவர் உண்மைத் தவசியே' என அறிந்து, பயந்து, அவரிருக்குமிடத்திற்கு ஓடிவந்து, தான் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டான். முனிவரும், சிறிதும் முகங்கோணமல் அரசனைச் சமாதானப் படுத்தினர். பின்னர் அவன் முனிவரைக் கழுவிலிருந்து எடுத்தால் அவருக்கு உடற்பாதை உண்டாகுமென்று கருதி, அரத்தால் அக்கழுவாணியின் இருபக்கங்களையும் அறுத்துவிட்டான். கழுவாணியின் நடுப்பாகம் மட்டும் முனிவரின் உடலிலேயே நின்றுவிட்டது. அன்று முதல் அம்முனிவருக்கு ஆணிமாண்டவ்யர் என்று பெயருண்டாயிற்று.

அரசன் முதலிய யாவர்க்கும் விடை கொடுத்தனுப்பிவிட்டு முனிவர், "இக்கதி நமக்குவந்த காரணமென்ன" என்று அறியவேண்டினர். இச்சந்தேகம் யாரிடஞ்சென்று கேட்டால் தீருமென்று யோசித்தார். பிறகு அவர் யமனைக்கேட்டால் சந்தேகந்தெளியுமெனத் தெளிந்து யமலோகஞ் சென்றார். யமன் முனிவரைக் கண்டு மரியாதையாக வரவேற்று அமரும்படி ஆசனங்கொடுத்தான். ஆணிமாண்டவ்யர் ஆசனத்திலமர்ந்து யமனை நோக்கி, "தர்மராஜனே! காய் கிழங்குண்டு கடவுளைத் துதித்துக் காட்டில் கிடக்கும் எனக்கு இவ்வித கடுமையான தண்டனை தரக்காரணமென்ன" என்று வினவினர். அதற்கு யமன் முனிவரை நோக்கி, "முனிவரே! நீர் இப்போது தவசியாயிருந்தாலும், உமது இளமைப்பருவத்தில் சிறுதும்பிகளைப் பிடித்து அவைகள் பதைக்கப் பதைக்க அவை

களின் வால்களில் துடைப்பக்குச்சிகளைக் குத்தி, அவைகள் துடித்துப் பறந்து செல்வதைக் கண்டு களிப்படைந்தீர். அக் குற்றத்திற்காகவே இக்கொடிய தண்டனை யுமக்கு விதிக்கப் பட்டது" என்று கூறினன். அது கேட்ட முனிவர் தமது தலைவிதியை வெறுத்துக்கொண்டு மறுபடியுந் தவஞ்செய்யச் சென்றுவிட்டார்.

சிறுமிகளே! சிறுவர்களே!

இக்கதையால் நீங்கள் என்னதெரிந்துகொண்டீர்கள்? தும்பி, வண்டு, முதலிய பிராணிகளைப் பிடித்து அவைகளை ஹிம்ஸை செய்யலாமா? அவைகளையும் நம்மைப் படைத்த கடவுளே படைத்தாரல்லவா! உங்களுடம்பில் குண்டூசியாற் குத்தினல் நோவுண்டாகிறதே! அதுபோலவே அவைகளுக்கும் நோவுண்டாகாதா? அவைகளில் மிகவும் சிறிய எறும்பு, ஈ முதலிய நுட்பப் பிராணிகளையும் ஒருவிதமாகவும் வருத்தலாகாது என்று உணருங்கள். மேலும் அத்தகைய கொடிய காரியம் மிகவும் பாபத்திற்கும், அதனல் உண்டாகும் கடவுள் தண்டனைக்கும் ஆளாக்குகின்றது அல்லவா? ஆதலால், எல்லாப் பிராணிகளையும் நம் சகோதரரைப்போலவே நேசித்து அவைகளுக்கு உதவிசெய்ய முற்படுங்கள்.

"வயிர முண்ணிரைத்து நீண்ட வார்சினை யிலவ மேற்றி
செயிரிற் றீமடுப்பர் கீழாற் சென்னுனைக் கழுவி லேற்றி
மயிருக் கொன்ருக வாங்கி வகைத்தகைத் திடுவர் மன்னு
உயிரைப் பேதுறுத்து மாந்தருயிரைப்பே துறுக்குமாறே"

—(சிந்தாமணி.)

கபீர்தாஸர்.

மோசல மாமுனிவரின் சந்ததியாராகிய முசல்மான்கள் வமிசத்திலே பிறந்த தமாலென்பவருக்கும் ஜிஜ்ஜாபீபி என்னும் மகமதியமாதுக்கும் பண்டரீநாதனருளாற் கிடைத்து வளர்ந்தவர் கபீர். அவர் மகமதிய குலத்திலிருந்தும் சிறு பிராயந்தொடங்கி பண்டரீநாதனிடம் மிக்க பக்தியுடையராகி அவரைப் பூஜை செய்துவர, அக்கடவுளும் இப்பக்தர்

மேல் அன்புகொண்டு அருள் செய்துவந்தார். ஜீவகாருண் யத்தில் தலை சிறந்து விளங்கிய பெரியோர்களுள் இவரும் ஒருவராவர்.

ஒருகால் கபீர்தாஸர் ஒரு விருந்தைக்குறித்துத் தம் சிறிய தகப்பனார் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது வழியில் சிலர் கூட்டங்கூடி ஒரு பசுவின் கன் றைப் பலியிடத் தயாராயிருந்தனர். அதுகண்ட கபீர் மனம் துடித்துக் கண்ணீர்வடித்து அக்கன்றினருகில் சென்று அதைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் செயலைத்தடுத்து, அநீதமென்று பேசி அதை விடுவித்த பின்பு அவர்களுக்கு ஜீவ ஹிம்சையைப்பற்றிய பழைய விருத்தாந்தமொன்றைக் கூறத்தொடங்கினார். அதென்னவெனில் :—

“நேபாளதேசத்துக் கருகிலுள்ள பட்டண மொன்றை யாண்டுவந்த அரசனும் அவன் மந்திரியும் தங்களிஷ்டத் தைப் பூர்த்திசெய்துவைக்கும்படி அவ்வூர்க் காளி தேவியை நடு நிசியில் பூஜித்து வந்தனர். அவ்வாறு அவர்கள் பன்னி ரண்டு வருஷம் பூஜித்துவர, ஒரு நாள் இரவு பத்திரகாளி அரசனை நோக்கி, ‘நீங்கள் எனக்குத் தகுந்த பூஜை கொடுத் தால் உங்களிஷ்டத்தை முடித்துவைப்பேன்’ என்று கூறி மறைந்தனள். அதுகேட்ட அரசன் மந்திரியை நோக்கிக் காளியின் வார்த்தையைக்கூறிச் செய்யவேண்டியதென்ன வென்று வினவினான். அதற்கு அமைச்சன், ‘அரசே! நீர் என்னைப் பலிகொடுத்துக் காளியின் அநுக்கிரகத்தைப் பெற் றுச் சுகமாக வாழும்’ என்றனன். மந்திரியின் வார்த்தை யைக்கேட்ட மன்னவன், ‘மந்திரி! உன் பேச்சு வெகு அழ காக இருக்கிறது! நாமிருவரும் ஒன்றாகச் சௌக்கியத்தை யனுபவிக்க வேண்டுமென்றல்லவோ இத்தனை நாள்களாகக் காளியைப் பூஜித்துவந்தோம்? அப்படியிருக்க நான் உன்னை யிழந்து என்செய்வது? நம்மிருவரையுந் தவிர்த்து வேறொரு மனிதனைத்தான் பலியிடவேண்டும்! அதற்கு யாருளர் சொல்’ என்றனன். அதற்கு மந்திரி பதில் சொல்லாமல் சிறிதுநேரம் சும்மா இருந்தான். அப்போது மன்னவன் மீண்டும் அமைச்சனைப் பார்த்து, இக்கோயிலுக்குப் பூசை செய்துவரும் கிழப்பிராமணனைக் காளிக்குச் சமர்ப்பித்து

விடலாமென, மந்திரியும் ஒருவாறு சம்மதிக்க, பிராமண னும் கோயிலுக்கு அழைத்துவரப்பட்டான். கிழப்பிராம ணன் தன் விதியை நினைந்து, காளியைத் தொழுதுவருவ தாக மன்னனிடத்தில் விடைபெற்றுக் கோயிலுக்குள் நுழைந்து, மிகுந்த கோபத்தோடு காளியின் கன்னங்களில் ஓங்கி யறைந்து, "ஹே கொலைக்காரி! பிறந்த நாள் முதல் உனக்குப் பூஜை செய்துவரும் என்னையா பலியாகப் பெற விரும்பினை! நீயும் உன் கோயிலும் பாழாகிப்போக" என்று கடுகடுத்துப் பேசினன்.

அப்போது காளி கிழப்பிராமணனுக்கு முன்புதோன்றி, "ஓ பிராமணா! நீ முற்பிறவியில் உன்னிஷ்டத்தை நிறை வேற்றிக்கொள்ள எனக்கு இரண்டு ஆடுகளைப் பலி யிட் டாய். அந்த இரண்டு ஆடுகளும் இப்போது அரசனும் அமைச்சனுமாகி உன்னைப் பலியிட்டுத் தம்மிஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொள்ள விரும்பின. நீ இப்போது அவர்க ளால் கொல்லப்படாவிட்டால் மறு ஜன்மம் எடுத்துக் கஷ் டப்படவேண்டிவரும். இதைக்குறித்து என்மேல் வீண் கோபம் கொண்டு என்னைப் பழிக்காதே. எனக்குப் பலியி னல் ஆவது ஒன்றுமில்லை.

எனது குழந்தைகளாகிய ஆடு, கோழிகளை நானே பலியாகப்பெற விரும்பினல், நான் உலகத்தைக் காப்பவள் என்பது எவ்வாறு எனக்குப் பொருந்தும்! குழந்தையைக் கொல்ல விரும்பும் தாயுமுண்டோ! எல்லாம் அவர்கள் தலை விதியே யாதலால், எனக்குப் பலியிடுவது வீணே! பாவிகள் என்பேரைச்சொல்லி யென் குழந்தைகளை வீணே யெனக் குப் பலியிடுகிறர்கள். அவர்களைக் காண என் கண்களும் மனமும் கூசுகின்றன. அவர்களெல்லாம் அதன் பலனை அவசியமடைவார்களென்பதிற் சிறிதும் ஐயமில்லை. அத னல் நீ இப்போது அவர்களுக்குப் பலியாவதே உனக்கு நன் மையாகும். மேலும் ராஜா, மந்திரி இருவரையும் உன்னை ஒரே சமயத்தில் வெட்டும்படி கேட்டுக்கொள். இல்லாவிடில் மற்றெரு ஜன்மம் எடுத்து அவர்களில் இன்னெருவரிடம் மறுபடி வெட்டுப்படும்படி நேரிடும்" என்று கூறினள்.

பிராமணனும் தன்னூழ்வினையை வெறுத்து அவர்கள் வாளுக்கிரையாயினன்.

சகோதர சகோதரிகளே! இத்தகைய பலி என்னும் கொடிய வழக்கத்தை நமது நாட்டில் அடியோடு நிறுத்தும் வண்ணம் முயலுங்கள்.

ஆடுமாடுகளைப் பதைக்கப் பதைக்கப் பலியிடுபவர்கள் அடுத்த ஜன்மத்திலாவது அதன் பலனை யடைவார்களென்பது நன்கு விளங்குவதோடு, அம்மனுக்கு அப்பலிகளில் இஷ்டமில்லாமையும் இதனால் நன்கு விளங்குகின்றன அல்லவா!

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."—(குறள்.)

பணக்காரனும் பிச்சைக்காரனும்.

வட இந்தியாவில் ஓர் பெரிய பணக்காரரிருந்தார். அவர் மிகுந்த தர்மசிந்தையுடையவர். ஒருநாள் அச்செல்வர் வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அவரை யணுகி, "ஐயா! எனக்குப் பசி அதிகமாக இருக்கிறது; தயவுசெய்து காலணா கொடுப்பீரானால், நான் ஏதாவது வாங்கித் தின்பேன்" என்று இரக்கமுண்டாகும்படி இரந்தான். பணக்காரர் அவன் நிலைமைக்குப் பரிதாபப்பட்டு அவனுக்குக் காலணா கொடுத்தார்.

காலணாவைப் பெற்ற பிச்சைக்காரன், "இதற்கு என்ன வாங்கலாம்" என்று யோசித்தான். அவனுக்குண்டான பசியையும் அவன் பொருட்படுத்தவில்லை. அக்காலணாவுக்கு ஒரு தூண்டில் முள்ளும், ஒரு சிறு கயிறும் வாங்கினால் அதன்மூலமாகக் கொஞ்சம் பணம் சேர்க்கலாம் என்று நினைத்தான். அவ்வாறே அவன் கடைக்குச்சென்று தூண்

டிற் கயிறும் முள்ளும் வாங்கினான். உடனே அவன் ஓர் நீர் நிலைக்குச்சென்று, தூண்டிலில் மீன்களுக்குரிய ஆகாரத்தைச் செருகி, அதைத் தண்ணீரில் வீசினான். அன்று அவனுக்குச் சில மீன்கள் தூண்டிலி லகப்பட்டன. அவன் அவைகளைக் கடைத்தெருவில் கொண்டு விற்றான். அவனுக்குக் கொஞ்சங் காசு கிடைத்தது. அவன் மறுபடியும் இன்னுஞ் சில தூண்டில்கள் வாங்கித் தினந்தோறும் படிப்படியாக அதிகமான மீன்களைப் பிடித்து அதிகமான பணம் பெற்றுவந்தான். சிலநாள்களுக்கெல்லாம் அவன் பெரிய பெரிய வலைகள் வாங்கிக் கடலில் சென்று மீன்களைப் பிடிக்கவுந் தொடங்கினான். இவ்வாறு அவன் சில வருஷங்களில் பெரிய பணக்காரனானான். தனக்குச் சிறந்ததொரு பங்களாவுங் கட்டிக் கொண்டான். அவனிடம் அநேக வேலையாட்கள் வேலை செய்து ஜீவனஞ் செய்தனர். காலணாவுக்கும் வழியின்றிக் கிடந்த பிச்சைக்காரன் இப்படிச் செல்வவந்தனாக, முன்பு இவனுக்குக் காலணா கொடுத்த பணக்காரர் கதியைக் கவனிப்போம்.

அப்பணக்காரர் தெருவில் பிச்சைக்காரனுக்குக் காலணா கொடுத்தது முதல் அவரைத் துன்பந்தொடர ஆரம்பித்தது. பிச்சைக்காரன் பணக்காரனாக ஆகுந்தோறும் இப்பணக்காரர் பிச்சைக்காரராகிவந்தார். முடிவில் பணக்காரர் பணமெல்லாம் எங்கேயோ பதுங்கிவிட்டது. அவர் உண்பதற்கும் உணவில்லாமல் பிச்சையெடுக்க ஆரம்பித்தார். ஒரு நாள் அவர் புதிய பணக்காரன் இருக்குந் தெருவழியாகப் பிச்சை யெடுக்கச் சென்றுகொண்டிருந்தார். அப்போது அப்புதிய பணக்காரன் மேல்மாடியில் உட்கார்ந்து தெருவில் நடக்கும் விநோதங்களைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவன் தன் வீட்டிற்கு எதிராகவந்த பழைய நண்பரைக் கண்டான். அவன் உடனே மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து தன் நண்பரிடஞ் சென்று, அவரைத் தன் வீட்டிற்குள் அழைத்துச்சென்றான். அவரைப் பலவிதமாக உபசரித்துப் பழைய வரலாற்றினை விசாரித்தான். அதற்குப் புதிய பிச்சைக்காரர், 'ஐயா! நீர் ஏன் அதையெல்லாம் கேட்கிறீர்? இஷ்டமிருந்து காலணா கொடுத்தால் வாங்கிச் செல்கிறேன்;

இல்லையென்றால் போய்விடுகிறேன். அனுவசியமாகப் பழைய கதையைக் கேட்கவேண்டாம்' என்றார்.

அதற்குப் புதிய பணக்காரன்: 'ஐயா! உம்மை எங்கோ பார்த்திருக்கும் ஞாபகம் எனக்கு இருக்கிறது. ஆதலால் உமது வரலாற்றை அறிய விரும்புகிறேன்; தயவு செய்து சொல்லவேண்டும்' என்று மறுபடியும் கேட்டான். அதனால், அவ்வறியவர் தாம் முன்பு பணக்காரராக இருந்ததையும், அப்போது ஒருவனுக்குக் காலணா கொடுத்ததையும், அது முதல் தாம் வறிஞரானதையும் அடிமுதல் கடைசிவரையில் கூறினார்.

அதுகேட்ட அச்செம்படவன், தன் பழைய நண்பரை நோக்கி, 'பெரியீர்! நீர் முன்பு காலணா தானஞ்செய்தது எனக்கே; உம்முடைய அருளினால்தான் நான் இவ்வளவு செல்வவானானேன்; இப்போது உமது நிலைமையைக்காண என் மனஞ் சகிக்கவில்லை; என்னுடைய செல்வத்தில் பாதியை யுமக்குக் கொடுக்கிறேன்; பழையபடி நீர் சுகமாக வாழ்ந்திரும்' என்று கூறினான்.

அவன் பேச்சுக்களைக் கேட்ட வறியவர், 'அப்பா! நீ எனதருளால் பணக்காரனான விதம் எப்படி?' என்று கேட்டார். அதற்கு அவன், 'சுவாமி! நீர் கொடுத்த காலணாவுக்கு நான் தூண்டில் வாங்கிச் சில மீன்களைப் பிடித்தேன்; அதை விற்றுப் பெற்ற பணத்திற்கு இன்னஞ் சில தூண்டில்கள் வாங்கி மிகுதியாக மீன்களைப் பிடித்து வியாபாரஞ் செய்து, நாளாவட்டத்தில் பெரிய வலைகளும் வீசி மிகுதியான மீன்களைப் பிடித்து இப்போது அடைந்துள்ள செல்வத்தைப் பெற்றேன்; நீர் எனக்குச் செய்த நன்றியை நான் மறவேன்' என்று கூறினான்.

ஜீவவதை சம்பந்தமான சொற்களைக்கேட்ட அப்பெரியார் துடிதுடித்து, 'ஐயோ! என் காலணாவால் எத்தனை

ஜீவன்கள் பாழாயின! அதனாலன்றோ என் செல்வமெல்லாம் பாழாயிற்று' என்று வருந்தி, அச்செம்படவனை நோக்கி, "நண்ப! நீ செய்த ஜீவவதையின் பலனே நான் பொருளிழந்த காரணம்! எப்படியெனில், நானன்று உனக்குத் தின்பண்டமாகக் கொடுத்திருந்தால் எண்ணற்ற மச்சங்கள் கடுந்துன்பப்பட்டு இறவாமல் இருந்திருக்குமன்றோ! நான் கொடுத்த காலணா கணக்கற்ற மீன்களின் ஜீவனுக்கு மிகுதியான ஹிம்சையைச் செய்தது. தூண்டிலில் அகப்பட்டுத் துடித்துப் பதைத்துப் பிராணனைவிட்ட பல மீன்களின் சாபமெல்லாம் என்னைச் சேர்ந்தன; தீயோனாகிய உனக்கு நான் உதவி செய்ததனால், என் நல்வினை யாவும் உன்னைச்சேர, உன் தீவினை என்னைச் சேர்ந்தது; இனியாவது தயவுசெய்து கடவுளின் கட்டளைக்குப் பயந்து, அவரால் படைக்கப்பட்ட ஜீவராசிகளுள் ஒன்றாகிய மீன்களைத் துடிக்கத்துடிக்கப் பிடித்து விற்றுப் பிழைக்குந் தொழிலைச் செய்யாமல் இருப்பாய்" என வினயமாகவும் அவன் மனதில் பதியும்படியாகவும் கேட்டுக் கொண்டார். அச்செம்படவனும் தான் அம்மாதிரி செய்வதாக ஒப்புக்கொண்டு, அதுமுதல் மீன் பிடிக்குந் தொழிலை விட்டு, எப்பிராணிக்கும் நன்மையே செய்யும் வழக்கத்தைக் கைக்கொண்டான்; மற்றும் தான் ஹிம்சைத் தொழிலால் சம்பாதித்த பொருள்களையும், அவன் நல்லோர்களுக்குத் தான தருமங்களைச் செய்து தன் பாவத்தையும் போக்கிக்கொண்டான்.

செம்படவன் ஜீவப்பிராணிகளிடத்தில் அன்புகாட்டத் தொடங்கியதுமுதல், புதிய வறியவர் இழந்த செல்வமெல்லாம் படிப்படியாகப் பெறப்பெற்றுப் பழைய நிலையையடைந்து சௌக்கியமாக வாழ்ந்துவந்தார்.

பிள்ளைகளே! அளவற்ற செல்வத்தோடு இருந்த அப் பெரியார் வறிஞரான காரணம் என்னவென்று தெரியுமா? தூண்டிலில் அகப்பட்ட மீன்கள், வாய் கண் மூக்கு முதலிய உறுப்புக்கள் கிழிபட்டு வருந்தி, 'எந்தப் பாவி நம்மை உணவு காட்டி வஞ்சித்து இவ்வாறு வருந்தச் செய்தானோ, அவன் உண்ணுஞ் சோற்றுக்கும் வழியின்றி நம்மைப்போல் வருந்திச் சாகட்டும்' என்று சாபமிட்டன. அந்த மீன்கள் துன்பப்

படக் காரணமானவர் அப்பெரியாராதலால், அவைகளின் சாபம் அவரைச்சேர, அவர் செல்வமிழந்து உண்ணும் உண வுக்கும் வருந்திப் பிச்சையெடுக்க ஆரம்பித்தார். ஆதலால், நீங்கள் வேடிக்கைக்காகவும் நீரில் வாழும் மீன், தவளை முத லியவைகளைப் பிடித்து வருத்தாதீர்கள். அவ்வாறு வருத்து வீராணல் அவைகளின் சாபத்துக்கு ஆளாகிக் கடவுளின் கோபத்துக்கும் வெறுப்புக்கும் உட்பட்டு வருந்த நேரிடும் என்பதை என்றும் மறவாதீர்கள்! மேலும், ஒரு சமயத்தில் ஸ்ரீமகா விஷ்ணு மீனாக அவதார மெடுத்த விருத்தாந்தமும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். அப்படி பகவானே மீனாக அவதார மெடுத்தால் அதன் சிறப்பு எவ்வளவென்று அறி வீர்களாக!

“ மங்கை மணுவனைய மென்சூன் மடவுடும்பு
செங்கண் வரிவரால் செங்நீ ரிளவாளை
வெங்கருனை புல்லுதற்கு வேறுவேருக் குறைப்ப
அங்காந்தழு கின்றதார் கண்ணே நோக்குமே.”

—(சிந்தாமணி.)

சிவபெருமான் பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது.

தென் மதுரையின் தென்பாகத்தில் குருவிருந்த துறை யூர் என ஓர் ஊர் உண்டு. அதில் சுகலன் என்ற ஓர் வேளா ளன் சுகலையென்ற தன் மனைவியோடு இல்லறம் நடத்திவந் தான். அவனுக்குப் பன்னிரண்டு ஆண் குழந்தைகள் பிறந் தன. அவ்வேளாளனும் அவன் மனைவியும் தம் குழந்தைகளை மிகவும் பக்ஷமாக வளர்த்து வந்தனர்.

பன்னிரண்டு குழந்தைகளும் நன்ருக வளர்ந்து பிள்ளைப் பருவத்தை யடைந்தார்கள். கர்வம் மிக்குடையவர்களானர் கள். துஷ்டத்தனங்களெல்லாம் அவர்களிடம் குடிகொண்டி ருந்தன. அப்பிள்ளைகள் சில வேடர்களோடு சேர்ந்து ஒரு நாள் காட்டிற்குச் சென்ருர்கள். அங்கு ஓர் புதரின்கீழ் ஒரு

முனிவர் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்ததை அவர்கள் கண்டார்கள். அவரைப் பைத்தியக்காரரெனப் பரிகசித்தார்கள். கற்களையும் கட்டிகளையும் வாரி அவர்மேல் வீசினார்கள். மரக்கிளைகளை முறித்து எறிந்தார்கள். அவர்கள் செய்கை முனிவருக்குக் கோபத்தை யுண்டாக்கிற்று. அவர் அப்பன்னிருவரையும் உறுத்துப் பார்த்து, " துஷ்டர்களே! நீங்கள் பூமி திருத்தியுண்ணும் குலத்திற் பிறந்தவர்களாதலால் பூமி பறித்துண்ணும் பன்றிக்குட்டிகளாகப் பிறந்துழலக் கடவீர்" எனச் சபித்தனர்.

முனிவரின் சாபத்தைப் பெற்ற அப்பிள்ளைகள் பயந்து நடுநடுங்கி அவர் பாதங்களில் விழுந்து சாப நிவர்த்தி செய்யும்படி வேண்டினார்கள். அதனால் முனிவர் ஒருவாறு கோபந் தணிந்து "சிவபெருமான் உங்கட்கு அன்னையாகி அமுதளித்து அமைச்சராக்கிப் பின்னர் அருள்வீடு நல்குவன்" எனச் சாப விமோசனமுந் தந்தனர். அவ்வாறே அப்பன்னிருவரும் அவ்வூர்க் காட்டிலுள்ள பன்றியரசுக்கும் அரசிக்கும் பிள்ளைகளாய்ப் பிறந்தனர்.

ஓர் நாள் பாண்டியன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அவனோடு பல வேடர்களுஞ் சென்றனர். அநேக நாழிகை வரையில் அரசன் வேட்டையாடினான். அப்போது சில பன்றிகள் பாண்டியன் செய்கையைத் தங்கள் அரசனிடஞ் சென்று கூறின. அதுகேட்ட பன்றி வேந்தன் பாண்டியனை யெதிர்த்துச் செல்லத் தயாராயினன். எல்லாப் பன்றிகளும் தங்கள் அரசனைச் சூழ்ந்து சென்றன. பன்றி யரசியும் தன் குழந்தைகளை அங்கேயே விட்டுக் கணவனைப் பிரியாமல் தொடர்ந்து சென்றாள். பன்றிகள் பாண்டியனோடு போர் புரிந்து தங்கள் பிராணனை யிழந்தன. பன்றி யரசனும் இறந்தனன். அதுகண்ட பன்றி யரசியும் அரசனை யெதிர்த்து உயிர் துறந்தனள்.

இங்கு இவ்வாறு பன்றிகள் அழியவும், காட்டிற் கிடந்த பன்றிக்குட்டிகள் தங்கள் தாயை வெகு நேரம் காணுமையால் வருந்தின. பசியின் கொடுமையால் பதைத்தன. வெயிலின் வெம்மையால் வாடின. நிழலைத்தேடி யங்கு மிங்குஞ் சென்றன. தம் துயரின் மிகுதியால் துடித்தன. இப்படிப் பன்றிக் குட்டிகள் பரதவித்துக்கொண்டிருக்கும்போது சிவ பெருமான் ஆகாயமார்க்கமாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர் அக்குட்டிகளின் கஷ்டத்தைக் கண்டு அவைகளுக்கு உதவிசெய்ய எண்ணினர். உடனே அவர் அவைகளின் தாயைப்போல் உருவெடுத்து, அக்குட்டிகள் களிக்க அவைகளின் எதிரே வந்தார். அவ்வாறு வந்த கடவுளை அக்குட்டிகள் தங்கள் தாயேயென நினைத்தன. தம் துயரமெல்லாங் கெடத் தாயின் எதிரே ஓடின. தாயின்மேல் விழுந்து புரண்டன. அதன் உடல் முழுதும் தாவித் தாவிக் குதித்தன. சந்தோஷ மிகுதியால் அங்குமிங்கும் ஓடின. நிலத்தைப் பறித்தன. இவ்வாறு பன்றிக்குட்டிகள் பெருங் களிப்புடன் தாயிடம் விளையாடி, அவள் இனிய பாலைக் குடித்துத் தங்கள் பசிப்பிணியைப் போக்கிக்கொண்டன. பெண் பன்றியாகிய சிவபெருமானும் குட்டிகள் மகிழ அவைகளோடு விளையாடி, அவைகளுக்குண்டான வருத்தத்தைப் போக்கி அவைகளுக்கு நல்லறிவும், நற்குணமும், நல் ஞானமும் உண்டாக அருள் செய்தார்.



பிறகு அவைகள், சாப விமோசனம் பெற்றுப் பாண்டிய தேசத்து அமைச்சர்களாகிக் கடைசியில் சிவகணங்களிற் சேர்ந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

சிறுவர்களே! நம்மவர்கள் பன்றிகளைப் பல படியாக இழித்துப்பேசி, அவைகளைத் துன்புறுத்துகிறார்கள் அல்லவா! அவ்வாறு செய்வது சரியாகுமா! மும்மூர்த்திகளில் ஒருவராகிய சிவபெருமானே பன்றியினுருவெடுத்து வந்தாரென்றால், பன்றிகளின் பெருமையை அளவிட்டுச் சொல்ல முடியுமா! மேலும், திருமாலுமன்றோ தமது பத்து அவதாரங்களிற் பன்றியின் அவதாரத்தையும் ஒன்றாகக் கொண்டனர்! இதனால் கடவுளுக்குப் பன்றியென்றும், மனிதரென்றும், மற்றவையென்றும் வித்தியாசங் கிடையாதென்பதும், அவர் எல்லாப் பிராணிகளையும் சமமாகப் பாவிக்கிறாரென்பதும், பிராணிகளின் வருத்தத்தைக் கடவுள் சகியாரென்பதும் மற்றும் பல சிறந்த நீதிகள் விளங்குகின்றன அல்லவா!

"இம்மையிப் பவத்தன்னையா யினிவரு பவமுஞ்
செம்மைசெய் தசேதனத்தையுஞ் சேதனஞ் செய்தார்
எம்மையெப் பவத்தாயினு மெனைப்பல வுயிர்க்கும்
அம்மையப் பராய்க்காப்பவ ரவரலா லெவரே."

—(திருவிளையாடற் புராணம்.)

சீவகன்.

ஹேமாங்கதமென்ற நாட்டிற்கு அரசர் சச்சந்த மஹாராஜர். அவருடைய புதல்வன் பெயர் ஜீவகன். ஜீவகன் ஒருநாள் வேடிக்கையாக உத்யானவனத்தில் உலாவிக்கொண்டிருந்தான். அப்போது அவன் மரணவஸ்தையோடு அங்கு விழுந்துகிடந்த நாயொன்றைக் கண்டான். அவனுக்கு அதன்மேல் இரக்கம் உண்டாயிற்று. உடனே அந்நாயினருகிற் சென்றான். அதனுடல் முழுதும் மிகுதியான காயங்கள் காணப்பட்டன. அதைக் கண்டு அவன் மிகுதியும் வருந்தினான். நாயின் துயர நிலையைக் காண அவனுக்குத் துக்கமுண்டாயிற்று. அதற்கு அவ்வாறு துன்பஞ் செய்தவர்களை வெறுத்தான்.

பின்பு சீவகன் அந்நாயைத் தன் கையாலெடுத்து அதற்கு

வேண்டிய சிகிச்சைகளைத் தாய் தன் குழந்தைக்குச் செய்வது போலச்செய்தான். தன் செய்கையால் நாயினுயிரைக் காப்பாற்ற முடியாதென அவன் அறிந்தான். அதனால் அவன் நாயை நோக்கி, "எனது அன்பார்ந்த சகோதரனே! எந்தக் கல்நெஞ்சனோ உன்னை இவ்வாறு கஷ்டத்திற்கு உள்ளாக்கிவிட்டான். உன்னுடைய காயங்களோ மிகவும் அபாயகரமாய் இருக்கின்றன. அதனால் நீ சீக்கிரம் இறந்துவிடுவாய் என்று நினைக்கிறேன். ஆனால், இறப்பினால் உன்னுடைய உடலழிகின்றதே தவிர, உயிர் அழியாது. ஆகையால் இம்மரணகாலத்தில் உலக பிதாவாகிய கடவுளைத் தியானஞ் செய். அடுத்த பிறவியிலாவது நற்கதி பெறலாம். அதற்குரிய மந்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன்" என்று சொல்லி அதன் காதுகளில் சில மந்திரங்களை அவன் உச்சரித்தான். உடனே நாயினுயிர் நீங்கியது.

பல வருஷங்களுக்குப் பின்பு சீவகன் ஒருநாள் அவ்வுத்யான வனத்துக்குச் சென்றான். அவன் அங்கு உலாவிக் கொண்டிருந்தபொழுது, ஆகாயத்திலிருந்து ஓர் ஜோதி அவனை நோக்கி இறங்கிற்று. அஜ்ஜோதியின் நடுவில் ஓர் தேவதை இருந்தது. சீவகன் அத்தேவதையைப் பார்த்து,

"ஓ! கடவுளே! நீர் யார்? என்னிடம் நீர் வந்த காரண மென்ன? தயவுசெய்து சொல்லவேண்டும்" என்று கேட்டான். அப்போது அத்தேவதை, "அன்பு நிறைந்த அரசனே! நான் முற்பிறப்பில் ஓர் நாயாக இருந்தேன். அக்

காலத்தில் நான் ஓர் துஷ்டனால் அடிபட்டு இத் தோட்டத்தில் இறக்கும் தருவாயில் விழுந்து கிடந்தேன். நீர் என்னைத் தற்செயலாகக்கண்டு, என்மே லெழுந்த அன்பினால், எனக்குச் சிகிச்சை செய்து, சிறந்த மந்திரமொன்றையும் உபதேசித்தீர். உமது அருளினால் நான் உயிர் நீங்கி, யக்ஷ ஜாதியர்களுக்கெல்லாம் அரசனாகிச் சுகமாயிருக்கின்றேன். நீர் சமயத்திற் செய்த பேருதவியை நான் மறக்கமுடியுமா! உமக்கு வேண்டிய வரங்களைத் தந்து போகலாமென்று வந்தேன்; இஷ்டமானதைக் கேளும்" என்று கூறிற்று.

அதுகேட்ட சீவகன், "கருணைமிக்க கடவுளே! உமது கைம்மாறு செய்யுங் கருத்தைக் கண்டு களித்தேன். இப்போது உம்மிடம் யான் பெறக்கூடியது ஒன்றுமில்லை. ஆனால் நான் வேண்டும்போது உம்மை நினைக்கின்றேன். அப்போது நீர் என்முன் தோன்றி எனக்கு வேண்டியவைற்றைச் செய்யும்" என்றுரைத்தான். தேவதையும் அவ்வாறே செய்வதாக ஒத்துக்கொண்டு, அவனிடம் விடைபெற்றுத் தன்னிருப்பிடம் சென்றது.

சில நாள்களுக்குப் பிறகு, சீவகன் அரசாட்சி செய்து வருங்காலத்தில் ஒரு தடவை பகைவர்களால் பிடிக்கப்பட்டான். அப்போது அவன் அத்தேவதையை நினைக்க, அது அவன் முன்தோன்றி, அவனுக்கு உதவி செய்தது என்று சிந்தாமணி கூறும்.

சீவகன் தன் சிறந்த குணத்தினுல், நாய்க்கு உதவிசெய்ததனுலன்றோ, தேவதையாகப் பிறந்த அந்நாயினுயிர் அவனுக்கு ஆபத்துக்காலத்தில் உதவிற்று. ஆதலால், "பிள்ளைகளே! எந்தப் பிராணியையும் அற்பமென்று அலட்சியஞ் செய்யாமல் அவைகளையும் நமது சகோதர சகோதரிகளைப்போற் பாவித்து அவைகளுக்கு உதவிசெய்தால், கடவுள் நமக்குக் கிருபை செய்வார்" என்ற நீதி விளங்குகிறதல்லவா!

"தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோன்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனு மின்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துய்ந்து போகுமே."

(சீவக சிந்தாமணி.)

நேமிநாத தேவர்.

ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய அத்தானும் ஜைனதீர்த்தங்

கரருமான ஸ்ரீ நேமிநாததேவர் ஒரு நாள் ஆடம்பரமான ஊர்வலத்தோடு உக்கிரசேன மஹாராஜருடைய பெண்ணைக்கலியாணஞ்செய்து கொள்ள அவருடைய அரண்மனைக்குச் சென்றுகொண்டிருந்தார். அவர் போகும் வழியில் திரளான ஜனங்கள் தமக்கு நல்வரவு கூறுவதையும், கூட்டமாக மிருகங்களும், பறவைகளும் பட்டிகளிலும் கூடுகளிலும் அடைக்கப் பட்டிருப்பதையுங் கண்டார். அம்மிருகங்களும் பறவைகளும் உறத்துக் கத்திக்கொண்டிருந்தன. அவர், அவைகளின் துன்பத்தைக்கண்டு அங்குள்ளவர்களை நோக்கி, "அம்மிருகங்கள் அவ்வாறு ஏன் அடைக்கப்பட்டிருக்கின்றன?" என்று கேட்டார். அப்போது, அவைகளெல்லாம் மேற்படி கலியாணத்து ஊர்வலக் கண்காக்ஷிக்காக அடைக்கப்பட்டிருக்கின்றனவென்பதைப் பிறர் சொல்ல, அவர் அறிந்தார். அவ்வாறுன வார்த்தைகளைக் கேட்ட தேவர் திடுக்கிட்டுத் தேரினின்று கீழே இறங்கிவந்து, அம்மிருகங்களையும் பறவைகளையும் விடுவித்தார். இப்படிப் பல உயிர்களின் துன்பத்தைக்காண அவர் மனம் சகிக்கவில்லை. அதனால் அவர் அக்கலியாணத்தை மறந்து, இனிக் கலியாணமே வேண்டாமென்று தீர்மானித்துத் தன்னைத்தானறியும் சிறந்த தியானத்திலாழ்ந்து ஊரூராகத் திரியுஞ் சந்நியாசியானர். சிலநாள்களுக்குப் பிறகு, அவர் தனக்குள்ளிருந்த கடவுளின் காட்சியைப் பெற்று, உலக அன்பே உயிர் உய்யும் உபாயம் எனப்போதிக்க ஆரம்பித்தார்.

மனிதர், மிருகம், பறவை முதலிய எல்லாப் பிராணிகளும் தங்கள் பகைமை மறந்து அவரைச் சூழ உட்கார்ந்து, அவருடைய போதனைகளைக் கவனித்தன. இதுவே உலக அன்பின் உன்னதமான ஆனந்தம்!

" எவ்வுயிரும் என்னுயிர்போல எண்ணியிரங்கவும் நின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே."

—தாயுமானவர்.

பிம்பிசாரர்.

மகதராஜ்யத்தை யாண்ட அரசர்களுள் பிம்பிசாரர் ஒருவர். அவர் ஒரு சிறந்த அரசர். குடிகளிடத்தில் மிகுந்த அன்புடையவர். அவர் ஒரு பெரிய யாகஞ்செய்ய ஆரம்பித்தார். அதற்காகப் பல அந்தணர்கள் பல பக்கங்களிலிருந்தும் வந்திருந்தனர். அந்த யாகத்திற்குச் சில ஆடுகள் வேண்டியிருந்தன. அக்காலத்தில் ஆடுகளைக் கொண்டு யாகங்கள் செய்வது வழக்கம். அதனால் பிம்பிசாரர் சிறந்த லக்ஷணங்களமைந்த சில ஆடுகளைக் கொண்டுவரும்படி ஒரு இடையனுக்குக் கட்டளையிட்டார். யாகங்களுக்குச் சிறந்த லக்ஷணங்களுள்ள ஆடுகளையே பலியிடவேண்டும். இடையனுக்கோ ஆடுகளின் அங்கலக்ஷணங்கள் தெரியவில்லை. அதனால் அவன் ஒரு மந்தையையே யாகசாலைக்கு ஓட்டிக்கொண்டு போனான். அதில் ஒரு நொண்டியாடும் இருந்தது. அது மிகுந்த வருத்தத்துடன் நொண்டி நொண்டி நடந்து சென்றது.

இவ்வாறு இடையன் ஆட்டு மந்தையோடு செல்வதை ஜீவகாருண்யம் மிகுந்த கௌதம புத்தர் தற்செயலாகக் கண்டார். அம்மந்தையில் சென்றுகொண்டிருந்த நொண்டி ஆட்டையும் பார்த்தார். அவருக்கு அதன்மேல் இரக்கம் உண்டாயிற்று. அவர் அம்மந்தையுடனிருந்த இடையனிடஞ் சென்று, " அப்பா! இவ்வளவு ஆடுகளையும் நீ எங்கே ஓட்டிச் செல்லுகிறாய்? ஐயோ பாவம்! அந்த நொண்டியாடு நடக்கமுடியாமல் கஷ்டப்படுகிறதே! ஏன் இவைகளை இவ்

வாறு துரத்திக்கொண்டுபோகிருய்"? என்று கேட்டார். அதற்கு அவ்விடையன், 'ஐயா! பிம்பிசார மஹாராஜா ஓர் யாகஞ் செய்கிருர். அதற்கு லக்ஷணம் நிறைந்த சில ஆடுகள் வேண்டுமாம். எனக்கு ஆட்டின் அவையவ லக்ஷணந் தெரியாது. அதனுல் இந்த மந்தையை யோட்டிச் செல்கிறேன்' என்ருன். யாகத்திற்காக ஆடுகள் செல்லுகின்றன என்பதைக் கேட்ட புத்தர்மனம் பதைத்தது. அவர், "ஐயோ! அனேக ஆடுகள் அநியாயமாக யாகத்தில் இறக்கப்போகின்றனவே! பரிசுத்தமான யாகசாலேயில் ஆடுகளேப் பலியிடலாமா! தேவர்களுக்குக் கொடுக்கவேண்டிய அவிர்ப்பாகம் ஆட்டிறைச்சியா! மாமிசத்தை யுணவாக வேண்டும் தேவர்களும் தேவர்களா! வேதகோஷம் நிறைந்த யாகசாலேயைப் பிராணிகளின் அழுகை யொலி நிறைந்த சுடுகாடாக்குவதா! சுத்தமான நெய்கொண்டு செய்யும் ஹோமத்தை அபரிசுத்தமான இரத்தத்தாற் செய்யலாமா! ஆஹா! என்ன அநியாயம்! என்னே உலகத்தின் மடமை! பிம்பிசார மஹாராஜருக்குமா இவ்வாறு புத்தி மயங்கவேண்டும்! இவ்வழக்கத்தை இனி எவ்விதத்திலாயினும் ஒழிக்கவழி தேடவேண்டும்! இல்லாவிடின் உலகில் யாகமென்றும், தெய்வவென்றும் மூட ஜனங்கள் பிராணிகளே அநியாயமாக வதைத்துக் கொல்வார்கள். ஆதலால் பிராணிகளின் அருமை தெரியாத இவ்வுலகத்துக்கு அவைகளின் பெருமைகளேயும், அவைகளெல்லாம் நம்மைப்படைத்த கடவுளாலேயே உண்டாக்கப்பட்டவையென்றும், அவைகளே நாம் ஹிம்சித்தால் உலக பிதாவாகிய கடவுளுக்கு நம்மேல் வெறுப்பும் கோபமும் உண்டாகுமென்றும், அவைகளும் நம்மைப்போல் இன்ப துன்பங்களே அனுபவிக்கின்றன என்றும், ஆகையால் அவைகள் நம்மால் ரக்ஷிக்கப்பட வேண்டியவைகளே தவிர, ஹிம்ஸிக்கத்தக்கன அல்லவென்றும் இவ்வாருன பல நற்புத்திகளேப் புகட்ட வேண்டுமென நினைத்தார். உடனே அவர் அந்த யாகத்துக்குச் செல்ல விரும்பினர்.

பிறகு அவர் இடையனேப் பார்த்து, "சகோதரனே! நானும் மஹாராஜரின் யாகத்துக்கு வரலாமா? எனக்கு அவரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆசை உண்டாகிறது;

என்னையும் அழைத்துச் செல்லுகிறாயா” என்று கேட்டார். அதற்கு இடையன் “சுவாமி! தடையில்லாமல் வாருங்கள். நீங்கள் வருவதனால் எனக்கென்ன கஷ்டம்!” என்றான். பின்பு புத்தர், இடையனை நோக்கி, “அந்த நொண்டியாட்டைப் பார்த்தால் எனக்கு மிகப் பரிதாபமாக இருக்கிறது. அதை நான் யாகசாலை வரையிற் கையில் தூக்கிக்கொண்டுவர நினைக்கிறேன்! தயவுசெய்து எனக்கு அனுமதி தரவேண்டும்” என்றார். அவர் பேச்சைக்கேட்ட இடையன் சிரித்து, “ஆடு நொண்டியாயிருந்தால் அதை யார் தூக்கிச் செல்லுகிறார்கள்! உமது வார்த்தைகள் வேடிக்கையாக இருக்கின்றன! வேண்டியிருந்தால் தூக்கிச் செல்லும்; அதை யேன் நான் வேண்டாமென்று சொல்லவேண்டும்” என்று பரிகசித்துக் கூறினான். கௌதமர் அவன் பரிகாச மொழிகளை லட்சியஞ் செய்யாமல், அந் நொண்டி யாட்டைத் தம் கைளில் தூக்கிக்கொண்டு சென்றார்.

பிம்பிசாரர் யாகஞ் செய்யுமிடத்தைப் புத்தரும் இடையனும் அடைந்தார்கள். அங்கு அப்போது யாக பலிக்குத் தயாராக ஓராடு இருந்தது. அதைக்கண்ட புத்தர் அவசரமாகச் சென்று அப்பலியாட்டைப் பிடித்துக்கொண்டார். அதைப் பலியிடவேண்டாமென்று தடுத்தார். மிருகங்களின் மேன்மையையும், அவைகளால் நமக்குண்டாகும் நன்மைகளையும், அவைகளுக்கும் ஆதிபிதா கடவுளே யென்றும், அவைகளெல்லாம் நமக்குச் சகோதர சகோதரிகளென்றும், அவைகளை ஹிம்சிப்பதனால் அழியாத நரகமே கிடைக்குமென்றும், யாகங்களுக்கும் கோயில்களுக்கும் ஆடு, மாடு, கோழி முதலிய பிராணிகளைப் பலியிட்டால் அவைகள் கட

வுளின் மனதிற்கு வெறுப்பையும், கோபத்தையும் உண்டாக்குமே தவிர, நன்மையொன்றுந் தராதென்றும் அங்கிருந்தவர்களுக்கும் அரசருக்கும் நன்ருகத் தெரியும்படி எடுத்துக் கூறினர்.

புத்தரின் பிரசங்கத்தைக்கேட்ட பிம்பிசாரரின் மனம் மாறிவிட்டது. அந்த யாகத்திற்காகக் கொண்டுவரப்பட்ட ஆடுகளையெல்லாம் திருப்பிக்கொண்டு போகும்படி உத்தரவிட்டார். ஆட்டிடையனுக்குப் போதுமான திரவியங் கொடுத்தார். அதனல் இடையன் மிகுந்த களிப்புடன் தன்னுடைய ஆடுகளை யோட்டிக்கொண்டு, புத்தரை வாயார வாழ்த்திச் சென்ருன்.

அன்று முதல் பிம்பிசாரர் புத்த மதத்தைக் கைப்பற்றினர். ஜீவவதை யென்பது தன்னுட்டிலெங்குந் தலைகாட்டாமல் தடுத்தார். ஜீவ ரக்ஷணத்துக்காகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்தார். அவர் காலத்தில் உலகத்திற் பிராணிகளெல்லாம் பயமின்றிச் சுகமாக வாழ்ந்தன. எல்லாப்பிராணிகளும் பிம்பிசாரரை வாயார வாழ்த்தின. பிம்பிசாரரும் தன்னுயுட்காலமெல்லாம் பிராணிகளுக்கெல்லாம் பிதாவாக விருந்து, அவைகளின் நன்மையையே நாடி வந்தார்.

சகோதர சகோதரிகளே!

யாகமென்றும், மதக்கொள்கை யென்றும் பேர் வைத்துப் பிராணிகளைக் கொல்வதனுல் நமக்குப் பெரும் பாவம் சம்பவிக்குமே யல்லாது நன்மை யொன்றுங் கிடைக்காது என்பதை மறக்கவேண்டாம். அவ்வாறு செய்கிறவர்களைக் கண்டாலும் அவர்களுக்கு நற்புத்தி கூறிப் பிராணி வதையை நிறுத்த முற்படுங்கள். அவ்வாறு செய்வதனுல் கடவுளின் அன்புக்குப் பாத்திரராவதன்றி, அளவற்ற சௌக்கியத்தையு மடைவீர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

"வேள்விவாய்க் கண்படுத்தும் வெவ்வினை செயாடவர்கை
வாளின்வாய்க் கண்படுத்தும் வாரணத்தி னீருரிபோற்
கோளிமிழ்ப்பு நீள்வலைவாய்க் கண்படுத்து மின்னணமே
நாளுலப்பித் திட்டார் நமரலா தாரெல்லாம்." (சிந்தாமணி)

அசோகர்.

பிம்பிசாரருக்குப் பிறகு அசோகர் மகத ராஜ்யத்தை ஆளத் தொடங்கினர். அவர் மஹா சக்ரவர்த்தியென்றும் நற்குணம் மிக்கவரென்றும் பெயர் பெற்ருர். வடக்கில் வடமேற்கெல்லை மாகாணத்தையும், தெற்கில் மைசூரையும், மேற்கில் கத்தியவாரையும், கிழக்கில் ஒரிஸ்ஸாவையும் எல்லையாகவுடைய பெரிய ராஜ்யத்தை அவர் நாற்பது வருஷகாலம் ஆண்டார்.

கலிங்க நாட்டை ஜெயிக்கச் சென்றபோது நடந்த யுத்தத்திலேற்பட்ட துன்பங்களைக் காண அவர் மனஞ் சகிக்கவில்லை. அதனல் அவர் குணம் அடியோடு மாறிவிட்டது. அவர் புத்தர் கொள்கைகளைச் சிறந்ததெனக்கொண்டு அம் மதத்தைப் பின்பற்றினர்.

அவர், மனிதர்கள் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளைத் தம் இஷ்டப்படி மலைகளிலும், கம்பங்களிலும், கற்பாறைகளிலும் செதுக்கி வைத்தார். பிராணி வதையை அவர் முற்றிலும் தடுத்தார். மனிதருக்கேயன்றி மிருகங்களுக்கும் தமது பெரிய ராஜ்யத்தில் வைத்திய சாலைகள் ஏற்படுத்தினர். உலகத்தில் அவரே முதன்முதல் மிருக வைத்தியசாலை ஏற்படுத்தியவரென்று சொல்லப்படுகிறது. மிருகங்களுக்கும் மனிதருக்கும் சினேகமும் அன்பும் உண்டாகும்படி பாடுபட்ட பெரியோர்களில் அவரும் ஒருவர்.

அசோகரது கீர்த்திபெற்ற கல்வெட்டுக்களில் அவர் பெயர் பிரியதரிசி என்று கூறப்பட்டிருக்கிறது; அதாவது, ஜீவராசிகளிடம் அன்பும் அருளுங்கொண்டவர் என்பதாம். மற்றும், அவர் தமது முழுமனதோடும் ஒரு புத்த சந்நியாசிக்குரிய விரதங்களை அனுஷ்டிப்பதாக விரதங்கொண்டார்.

தமது ஆளுகையின் முதல் எட்டு வருஷங்கள் வரையில் அவர் குடிகளைப்பற்றிய கவலையே இல்லாமல் இருந்தார். பதினோராவது வருஷத்தில் வேட்டையாடுவதை அவர் விட்டுவிட்டார். வேட்டைக்குப் பதிலாகத் திவ்ய தேய யாத்திரைகளையும், தானதருமங்கள் செய்வதையும், நீதி

போதனைகள் செய்வதையும், அவைகளைப்பற்றி விசாரணை செய்வதையும் கைக்கொண்டார். பதின்மூன்ருவது வருஷத்தில் அரண்மனைக்கென்று மிருகங்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட்டதோடு, யாகங்களுக்காகக் கொல்லப்படுவதும் நிறுத்தப்பட்டது. அவரது நகரத்தில் விடுமுறை நாட்களின் விருந்தென்ற காரணத்தி லேற்பட்டிருந்த மிருக வதைகளும் நிறுத்தப்பட்டன.

அசோகர் இருபத்தேழாவது வருஷ ஆட்சியில், தமது அதிகாரத்துக்குட்பட்ட எல்லாமதஸ்தர்களையும் பலவிதமான சட்ட திட்டங்களினுல் வசப்படுத்தி மிருக சம்ரக்ஷணையின் மேன்மையைப் பாதுகாப்பதற்கான அனேக புதிய ஏற்பாடுகள் செய்தார்.

வருஷத்தில் தேர்ந்து குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தினங்களில் மீன்களைப் பிடிப்பதும் விற்பதும், மற்றும் அந் நாட்களில் வேட்டையாடி மிருகங்களை அழிப்பதும் கூடாது எனக் கட்டளையிட்டார். உற்சவ தினங்களிலும், மற்றும் குறிக்கப்பட்ட நாள்களிலும் எருதுகளுக்கும் மற்ற நாற்காற் பிராணிகளுக்கும் கால்பிடிப்பது என்பது நிறுத்தப்பட்டது. கோழிகள், ஆடுகள், மாடுகள் முதலான மிருகங்களைச் சண் டைக்கு விடுவது எக்காலத்திலும் நடக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டது. சட்டதிட்டங்களினுல் மிருகங்கள் துன்பம் நீங்கி இன்பம் அடைவதைக் கண்டு திருப்தியடைய அவருக் குப் பல வருஷங்களாயின.

அவர் பெரிய ராஜ்யத்தை யாண்டபோதிலும் உண்மை யான சந்நியாசியாவர்.

"இறப்பநு மக்கடுத்த வெவ்வநோ யாவும்
பிறர்க்குமஃ தாமென்று கொண்மி—னுறக்கருதி
யெவ்வாறு மக்குறுதி யெண்ணுதிர்நீ ரெல்லார்க்கு
மவ்வாறே யெண்ண லறம்."—(பெருந்தேவனுர் பாரதம்.)

மகம்மது நபியும் பூனையும்.

மகம்மதியர்களுக்கு ஆதி குரு மகம்மது என்னும் பெரியார். அவர் எல்லாப் பிராணிகளையும் தம்மைப்போலவே பாவித்தார். அவைகளுக்கு வேண்டிய நன்மைகளையுஞ் செய்தார். அவர் தமது சீடர்களுக்கு ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பல விஷயங்களைப் போதித்தார். யாவரும் எப் பிராணிக்கும் ஒரு சிறு துன்பமும் செய்யக்கூடாதென்று வற்புறுத்தினர்.

அத்தகைய பெரியாருக்கு ஒரு சிறந்த நண்பனுண்டு. அது யாரெனில் ஓர் பூனையாகும். அவர் அதை அளவு கடந்து நேசித்தார். அப்பூனையும் அவரிடம் மிகுந்த பக்ஷமாக இருந்தது. ஒரு சமயம் மகம்மது நித்திரை செய்து கொண்டிருந்தபொழுது, அப்பூனையும் அவர் சட்டையில் படுத்துப் பக்கத்தில் தூங்கிவிட்டது. விழித்தெழுந்த மகம்மது, அப்பூனையைக் கண்டு, அதன் தூக்கத்தைக் கலைக்க மனமில்லாமல், ஓர் கத்தரிக்கோலால் அது படுத்திருந்த இடத்தைச் சுற்றித் தமது சட்டையைக் கத்தரித்துவிட்டார். பார்த்தீர்களா அப்பெரியாரின் அன்பை!

"உன்னைச் சிருஷ்டித்த கடவுளை நீ நேசிக்கிறாயா? அப்படியானல் உன்னோடுள்ள மிருகங்களை முதலில் நேசி. அவைகளும் கடைசியில் கடவுளையே திரும்பிச் சேருகின்றன."

—கொரான்.

சபக்டிஜின்.

சபக்டிஜின் மகம்மது கஜினியின் தகப்பனர். அவர் இளமையில் வறியவராயிருந்தார். அவருக்கு ஒரு குதிரை மாத்திரம் இருந்தது. அவர், அதன்மேலேறிக்கொண்டு தாம் வசித்த பட்டணமாகிய நிஷாபுரத்தைச் சுற்றிலுமுள்ள காடுகளில் வேட்டையாடித் தம் காலத்தைக் கழித்துவந்தார்.

ஒருநாள் அவர் காட்டிலிருந்தபொழுது, சிறிதும் பயமில்லாமல் தன் குட்டிக்குத் தீனி கொடுத்துக்கொண்டிருந்த ஒரு பெண் மானைத் தற்செயலாகக் கண்டு, குதிரையை அதனிடம் வேகமாகச் செலுத்தி, அக்குட்டியை யெடுத்து அதன் கால்களை நன்றாகக் கட்டிக் குதிரையின் ஜேணத்தின் மேல் தம் மெதிரில் வைத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பிப் போனார்.

ஆனால், அப்பரிதாபமான பெண்மான் அவரையே இரக்கமுண்டாகுமாறு பார்த்துக்கொண்டு அவர் பின்னே வெகு

தூரம் வர, சபக்டிஜினுடைய மனது அதனிடம் இரக்கங்கொண்டது. உடனே அவர் அக்குட்டியைப் போகும்படி விட்டு விட்டார். பிறகு அத்தாய்மான் மிகுந்த சந்தோஷப்பட்டுத் தனது குட்டியோடு இன்பந் நிறைந்த வாழிடமான வயற்புறங்களுக்குத் திரும்பிச்சென்றது. ஆனால் அது போகும்போது சபக்டிஜினை அன்பு ததும்பும் பார்வையோடு பார்த்துக்கொண்டே சென்றது.

அன்று இரவு சபக்டிஜின் தமது கனவில் மரியாதை மிகுந்த மகம்மது நபியைக்காண, அந்நபி அவரிடம் “ ஓ சபக்டிஜின்! நீ சந்தோஷமற்றதும் உதவியற்றதுமான ஒரு பிராணியிடம் காட்டிய இரக்கத்தன்மை கடவுள் சபையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. உன்னுடைய பெயர் அரசர்கள் பெயரோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீ எப்பொழுதும் இம்மாதிரியாக உனது குடிகளிடம் நடந்துகொள்வதோடு, கொடூர குணத்தையே அடியோடு விட்டுவிடு.

ஏனென்றால், அன்பும் இரக்கமுமே இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் நன்மையைச் செய்யும் ஊற்றுக்களாகும்" என்றார். பின்பு, சபக்டிஜின் அதுபோலவே மிகச்செல்வம் நிறைந்து அரசரானார்."

"எல்லாப் பிராணிகளும் அல்லாவினுடைய குடும்பத்தைச் சேர்ந்தவைகளே; ஏனென்றால், அவைகளெல்லாம் அவராற் காக்கப்படுகின்றன; ஆகையால், அல்லாவின் குடும்பத்துக்கு எவன் நன்மையைச் செய்கிறானோ அவனே அல்லாவுக்கு அன்புடையவனாகிறான்."—கொரான்.

ஒரு காலுக்கு மோக்ஷம்.

(பாரசீக கதை)

சொராஸ்டர் பாரசீக தேசத்தைச் சேர்ந்தவர். அவர் தம் பெயரால் ஒரு பெரிய மதத்தை ஸ்தாபித்தவர். அம் மதத்திற்குச் சொராஸ்டிர மதம் என்று பெயர். சொராஸ்டர் மிகுந்த நற்குணமும் தெய்வபக்தியு முடையவர். பெரியோர்களிடத்திற் பணிவுகொண்டவர். துஷ்டர்கள் இறந்தபின் எவ்வித தண்டனையை யடைவார்கள் என்று அறிய அவர் ஆவல் கொண்டார்.

ஒரு நாள் இரவு அவர் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு கனவு கண்டார். அதில், !ஒரு தேவதூதன் அவரிடம் வந்து அவர் குணாதிசயங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசி, அவரைச் சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் அழைத்துச் சென்றான். சொராஸ்டர் நரகத்திற் கஷ்டப்படுகின்றவர்களையும், சுவர்க்கத்திற் சுகமனுபவிக்கின்றவர்களையும் பார்த்துக்கொண்டே சென்றார். அவர் நரகத்துக்குச்சென்றபோது ஓர் அரசன் ஒற்றைக்காலுடன் வருந்திக் கொண்டிருப்பதையும், சுவர்க்

கத்தைக் கண்டபோது அங்கு ஒருகால் மாத்திரம் சௌக்கியமாக இருப்பதையும் கண்டு அதிசயித்து அதன் விசேஷ

மென்ன என்று அத்தூதனை விசாரித்தார். அப்போது அத்தூதன், "அந்நொண்டி பூலோகத்திலிருந்தபோது ஒரு பெரிய அரசனாக விளங்கினான். அவன் மிகவும் கெட்டவன். அளவற்ற செல்வத்தைப் பெற்றிருந்தும் அவன் ஈயாத லோபியாகத் தன் வாழ்நாளை வீணாகக் கழித்துவந்தான். அவன் தன் வாழ்நாளில் ஒரு நற்காரியம் தவிர வேறொரு நன்மையும் செய்தறியான். அதுவும் மிகவும் அற்பமானது. அது என்னவென்றால், ஒருநாள் அவன் அரண்மனையைவிட்டு வெளிச்சென்றபோது, அங்குக்கட்டியிருந்த ஒட்டகமொன்று தன் ஆகாரமிருந்த தொட்டி யொன்றை யெட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கண்டு, அத்தீனி யிருந்த



தொட்டியைத் தன் காலால் அதனிடம் தள்ளிச் சென்றான். அவ்வொட்டகம் தீனி தின்று சந்தோஷமடைந்தது. அந்த ஒரு நற்செயலுக்காக அதைச்செய்த அவனுடைய கால் சுவர்க்

கத்திலும், அவன் நரகத்திலுமாக இருக்க நேர்ந்தது" என்று கூறி மறைந்தனன்.

இவ்வாறு கனவு கண்டெழுந்த சொராஸ்டர் தன் சந்தேகம் நீங்கப்பெற்று எல்லோருக்கும் நன்மையே செய்து தம் வாழ்நாளை இனிதாகக் கழித்துவந்தார்.

சிறுவர்களே!

மேற்கூறிய கதையினால், மிருகங்களுக்கு ஒரு சிறு நற்காரியம் செய்தாலும் அதற்குத்தகுந்த நற்பலனை அடைகிறோமென்பதும், தீமை யென்பதை அறவே ஒழித்து எப்பிராணிக்கும் நன்மையே செய்துவந்தால் நாம் மறுபிறப்பில் சிறந்த நன்மையை யடையலாமென்பதும் விளங்குகின்றன அல்லவா!

"கடவுளை அவருடைய சிருஷ்டியாகிய பிராணிகளுக்கு அன்பு காட்டி கௌரவப்படுத்து. கடவுளால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு பிராணியும் உன்னிடம் அவரால் அனுப்பப்பட்ட பாதுகாப்புப் பொருள் என்று நினைத்து அவைகளைப் பக்ஷமாக நடத்தி மேன்மைப்படுத்து."—அவெஸ்டா.

கிறிஸ்துவத் துறவிகளும் அவர்களுடைய மிருக நண்பர்களும்.

அஞ்ஞானம் நிறைந்திருந்தகாலம் என்று சொல்லப்படும் பழைய காலத்திலிருந்தவராக இருந்தாலும், 'உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக' என்ற தேவன் கட்டளையை நம்மைவிட நன்றாகத்தெரிந்திருந்த நல்லோர்களைப் பற்றிய கதைகள் இங்கே சொல்லப்படுகின்றன. அவர்கள், 'பிறர்' என்ற சொல்லுக்கு மிருகங்களையும் பறவைகளையுங் கூடச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற நம்பிக்கையோடு கூடிய விரிவான பொருளைக்கொண்டார்கள். அவ்வாறிருந்தவர்களில் அநேகர் தங்களைச் சேர்ந்தவர்களின் மேலுள்ள அன்பினாலும், கிறிஸ்துவ மதக் கொள்கைகளைப் போதிப்பதற்காகவும் அடிக்கடி தங்கள் வீட்டையும் நாட்டையும் விட்டுச் சென்ற கிறிஸ்துவத்துறவிகளே.

இத்தகைய துறவிகளாகவிருந்த நல்லோர்கள் தங்களைச் சேர்ந்தவர்களால் கொடுமையாகவும், கொல்வதற்கான வழி களிலும் நடத்தப்பட்டிருந்தபோதிலும், கொடிய காட்டு மிருகங்களோடு சிநேகமாகவும் அவைகளின் இருப்பிடங்களைச் சுற்றியும், குகைகள் பாழிடங்கள் முதலிய விடங்களிலும் வசித்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் எவ்வளவு கொடு மையான பசிப்பிணியால் பீடிக்கப்பட்டு வேட்டையாடத் தூண்டப்பட்டபோதிலும், மிருகங்களை வேட்டையாடிக் கொன்றதே கிடையாது, என்று அவர்கள் சரித்திரங்களால் தெரியவருகிறது.

"உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோலப் பிறனிடத் திலும் அன்பு கூறுவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தை யிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்."

கலாத்தியர் 5-14.

ஸெயின்ட் அந்தோனியார்.

(SAINT ANTONY.)

ஸெயின்ட் அந்தோனியார் அலெக்ஸாண்டிரியாவி லிருந்து துரத்தப்பட்டு, நைல் நதியின் தீவுகளி லொன்றிற்கு அடைக்கலமாக வோடிவந்து அங்கிருந்த இதர கிறிஸ்தவர்க ளோடு வசித்திருந்தவர். சில நாள்களுக்குப் பிறகு அவர் அருகிலுள்ள ஊரொன்றில் ஸெயின்ட் பால் வசிப்பதாக அறிந்தார். அவர் அவரைப்பார்க்க விரும்பினார். அவர் ஒரு பெரிய பாலை வனத்தையும் பல துஷ்ட மிருகங்களையுங் கடந்து சென்றும், ஒரு துஷ்ட மிருகமாவது அவருக்குத் தீங்கொன்றுஞ் செய்யவில்லை.

கடைசியில் அவர் ஸெயின்ட் பாலை யடைந்து, அப்பெரி யார் தமது பக்கத்தில் தோழனாகிய அண்டங்காக்கையோடு (ரேவன்) உட்கார்ந்திருக்கக் கண்டார். ஒரு நாள் அவர்கள் இருவரும் வெகுநேரம் பேசியிருந்த பிறகு, ஸெயின்ட் பால்

தாம் கஷ்டமும் ஆயாஸமும் அடைந்திருப்பதாகக் கூறிக் கீழே மணலிற் படுத்துக்கொண்டார். சீக்கிரம் தூங்கிவிட்டார். பிறகு எழுந்திருக்கவே இல்லை. அவர் அப்படியே இறந்துவிட்டார். அதுகண்ட ஸெயின்ட் அந்தோனியார் தாம் மிகவும் மெலிந்தவராக இருப்பதால் அவருடலை எவ்வாறு அடக்கஞ் செய்யப்போகிறோமோ என்று நினைத்தார்.

அப்படி யோசித்துக் கொண்டிருக்கையில், அவர், பிட் பாட் என்று மிருதுவாகக்கேட்கும் பாதங்களின் விசித்திரமான ஒரு சப்தம் தம்மைநோக்கி வருவதாக அறிந்து, சீக்கிரத்தில், மஞ்சள் நிறமான உற்றுநோக்கும் கண்களோடு கூடிய பழுப்புநிறம் பொருந்திய இரண்டு பெரிய சிங்கங்களைக் கண்டார். அவைகள் அந்தோனியாரைச் சும்மா பார்த்துவிட்டு, வழக்கம்போல் தங்கள் சிநேகிதராகிய ஸெயின்ட் பாலின் க்ஷேம சமாசாரங்களை விசாரிப்பதைப்போல, அவருடலிடமணுகி முகர்ந்து பார்த்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் அவைகள் தங்கள் சிநேகிதர் இறந்துவிட்டதை அறிந்து, தங்கள் பாதங்களால் ஒரு பெரிய பள்ளந் தோண்டச் சென்றன. தங்கள் வேலை முடிந்தவுடன் அவைகள் மறுபடியும் தமது சிநேகிதரின் உடலண்டைச் சென்று அவரது குளிர்ந்த கால்களை நக்கிவிட்டு மறுபடியும் திரும்பாதபடி அமைதியாகச் சென்றுவிட்டன.

ஸெயின்ட் அந்தோனியார் சிங்கங்களின் உதவிக்கு அனேக வந்தனஞ் செலுத்தித் தமது மேலாடையினுல் சினேகிதரின் உடலை நன்ருக மூடிக் குழிக்குள்ளிட்டு அடக்கஞ் செய்தார். அவர் பிறகு தீவிலுள்ள தமது வீட்டுக்குத் திரும்பிப் போய்விட்டார்.

"கர்த்தாவே! மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர்." சங்கீதம் 36-6.

ஸெயின்ட் அவென்டீன் டே ட்ராயிஸ்.

(SAINT AVENTIN DE TROYES.)

பறவைகளெல்லாம் ஸெயின்ட் அவென்டீன் டே ட்ராயிஸ் என்பவர் கையிலிருந்து ஆகாரமுண்டு, அவர் மௌனமாக இருக்கும் நேரங்களில் அவைகள் தமது இனிய பாடல்களால் வந்தனஞ் செய்தன என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு நாள் ஒரு கரடி தன் பாதத்தில் முள் தைத்ததனுல் மிக வருந்தி, நோயோடு காலைத் தூக்கிக்கொண்டு 'உதவிசெய்ய வேண்டும்' என்பதற் கறிகுறியாக உறுமிக்கொண்டே அத்துறவியினுடைய குடிசைக்கு வந்தது. அன்பு மிகுந்த அப்பெரியார் அதன் பாதத்திலுள்ள முள்ளை மெதுவாக எடுத்து அதன் நோயைப் போக்கினுர். அதனுல் அம்மிருகம் தனது நன்றி பாராட்டுக் காரணமாக அவர் பாதங்களில் விழுந்து வணங்கிற்று. மற்றொரு சமயத்தில் மிகவும் கொடுமையாக வேட்டை யாடப்பட்ட மானென்றும் அவர் குகையில் அடைக்கலம் புகுந்தது.

"அநேக பாவமற்ற குழந்தைகளும் ஆடுமாடுகளும் மகா பொல்லாத பட்டணமாகிய நினிவேயிலிருந்தபடியால் தேவன் அதை அழிக்க மனதில்லாதிருந்தார்." யோனு 4 : 11.

"போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறது."

1 கொரிந்தியர் 9-9.

ஸெயின்ட் கத்பெர்ட்.

(SAINT CUTHBERT.)

இங்கிலாந்தின் வட பாகத்திலுள்ள காட்டுப்புறங்களிலும், தனித்த மலைப்பக்கங்களிலும் ஆடுகளை மேய்த்துத் தமது ஆகாரத்தைச் சம்பாதித்து வசித்திருந்த ஒரு திக்கற்ற ஏழைச் சிறுவர் கத்பெர்ட் என்பவர். அவர் பிராணிகளை நேசிப்பதில் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தார்.

ஓர் மழைநாளிரவு அவர் நக்ஷத்திர வெளிச்சத்தில் கடவுளைப் பிரார்த்திப்பதற்காகச் சென்று, முழந்தாளிட்டு ஸ்தோத்திரஞ் செய்திருக்கையில், பழுப்பு நிறமுள்ள ஆட்டர் என்ற இரண்டு மீன்கள் தண்ணீரிலிருந்து வெளிப்பட்டு அவர் குளிர்ந்த பாதங்களை நக்கி, அவைகளின்மேல் உஷ்ணத்திற்காகப் படுத்துக்கொண்டன. அன்று முதல் அவர் துறவியாகத்தீர்மானித்து, ஸ்காட்டிஷ் தேசத்துக் கடற்கரையைச் சேர்ந்த பார்னி என்னுஞ் சிறு தீவில் வசிக்கத் தீர்மானித்தார். அவர் அங்குள்ள மலைக் குகையொன்றில் வசித்தார். அக்குகை இரண்டாக்கப்பட்டு, ஒன்று பூஜைக்கும், மற்றொன்று படுக்கைக்குமாயிற்று.

அவர் அங்கு ஒரு நிமிஷமாவது தனித்திருந்தது கிடையாது; ஏனென்றால், அவர் நேசித்த பறவைகள் எப்போதும் குகையினருகில் கூடி அவர் புஜங்களில் உட்கார்ந்துகொண்டு கைகளில் உள்ள ஆகாரத்தைப் புசிக்கும். ஸெயின்ட் கத்பெர்ட் பக்ஷிகளை மிகவும் நேசித்ததால், அவர் இறக்கும்போது அவைகளையெல்லாம் சமாதானத்துடன் சந்தோஷமாக வசிக்கும்படி ஆசிர்வதித்தார். அத்துறவி நேசித்த பறவைகளின் சந்ததியிற் பிறந்த கடற்பறவைகள் அந்தப்பார்னிதீவில்

இன்றும் கூடுகின்றன. ஸெயின்ட் கத்பெர்ட்டினுடைய சமாதானம் அந்தத்தீவில் இன்றும் நிலைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

"இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை." லூக்கா 12 : 6.

ஸெயின்ட் ஆண்ட்ரு டே சேனி.

(SAINT ANDRE DE SEGNI.)

ஸெயின்ட் ஆண்ட்ரு டே சேனி என்னும் பெரியார் தேக அசௌக்கியமாக இருந்தபோது, பல சிறு பறவைகளைக் கொண்டு செய்த மருந்தால் நோய் தீருமென்று ஆசையுண்டாக்கப்பட்டார். அப்பெரியார் அச்சிறு பறவைகளின் துன்பப்படுத்தப்பட்ட உடலைக்கண்டு பரிதபித்து, அவைகளைப் பிழைப்பூட்ட விரும்பினார். அவைகளின்மேற் சிலுவையின் குறியைப் பொறித்து, அவைகளை அங்கீகரிக்குமாறு கடவுளை வேண்டினார். உடனே அவைகள் இறகுகள் நன்கமையப் பெற்று ஆகாயத்திற் பறந்து சென்றன என்னுங் கதையொன்று கூறப்பட்டுள்ளது.

"பரம பிதாவின் சித்தமில்லாமல் ஒரு அடைக்கலான் குருவியும் தரையிலே விழாது" மத்தேயு 10 : 29.

ஸெயின்ட் ஜெரோம்.

(SAINT JEROME.)

ஸெயின்ட் ஜெரோம் 373 A.D. யிற் பிறந்தார். அவர் தமது சகாக்களான மற்றைய கிறிஸ்துவர்களோடுஞ் சேர்ந்து பெத்லகேம் என்ற இடத்திற் கட்டப்பட்டிருந்த ஒரு மாதா கோவிலில் வசித்திருந்தார். ஒரு நாள் அவர் வாசற்படியை விட்டு வெளிவரும்போது, ஒரு சிங்கம் வீங்கியிருந்த தன் பாதத்தைத் தூக்கிக்கொண்டு நோவுடையதுபோல நொண்

டிக்கொண்டு தம்மை நோக்கி வருவதைக் கண்டார். அதன் காற்சதையில் பெரிய முள்ளொன்று பொருந்திருப்பதைப் பார்த்தார். அவர் அம்முள்ளைக் கஷ்டப்பட்டு மெதுவாக அதன் பாதத்திலிருந்து எடுத்த பிறகு, அந்நோய் குணமடைவதற்காக அதை ஒரு மூலையிற் சௌக்கியமாகப்படுத்திருக்கத் தூண்டினார். சிங்கம் சௌக்கியமடைந்தபிறகும் அவ்விடத்தை விட்டுப்போக மனமில்லாமல், அங்கேயே இருக்கத் தீர்மானித்துக்கொண்

டது. அதுவும் சந்நியாசிகள் உண்ணும் உணவையேயுண்டு ஜீவித்தது.

அம்மாதாகோவிலில் உயர்ந்தோர் முதல் தாழ்ந்த மிருகம் வரையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் பாகமான வேலையைச்செய்தே தீரவேண்டும். சிங்கத்திற்கு எவ்வித வேலை கொடுப்பது என்று தெரியவில்லை. தினந்தோறும் அக்கோயிலுக்குத் தேவையான விறகுகளைக் காட்டிலிருந்து சுமந்து வரும் கழுதையொன்று அங்கிருந்தது. அக்கழுதையைப் பாதுகாக்கவும், கவனிக்கவுமான வேலை சிங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. அச்சிங்கமும் கழுதையும் சிலநாட்களில் அத்யந்த சிநேகமாய்விட்டன. கோடைக்காலத்தில் ஒருநாள் கழுதை மேய்ந்து கொண்டிருந்தபொழுது, சிங்கம் அயர்ந்து தூங்கிவிட்டது. அப்போது அவ்வழியாகச் சென்ற சில வியாபாரிகள் அந்தக் கழுதையைத் திருடிக் கொண்டு போய்விட்டார்கள். சிங்கம் விழித்துக்கொண்ட பிறகு கழுதையைக்காணமல் இங்குமங்கும் வீணாக அலைந்து திரிந்தது. கழுதையோ அகப்படவில்லை. மாலையானதும் சிங்கம் தனது வருத்தத்தையும், வெட்கத்தையும் வெளிப்படுத்தும் அறிகுறியாகத் தன் தலையையும் வாலையும் தொங்க

விட்டுக்கொண்டு மாதாகோவிலுக்குத் திரும்பி வந்தது. சிங்கத்தால் விஷயத்தை விளக்கமுடியாமற்போகவே, ஸெயின்ட் ஜெரோம், அச்சிங்கம் பச்சையான மாமிசத்தைத் தின்னும் தனது பழைய குணத்தை விட்டிருக்கமுடியாமல், கழுதையைக்கொன்று தின்றுவிட்டது என்று நினைத்தார். அன்று முதல் அக்கழுதைக்குப் பதிலாகச் சிங்கம் விறகுகொண்டு வரும் வேலையில் நியமிக்கப்பட, அதுவும் வணக்கமாக வொத்துக்கொண்டு அவ்வாறே செய்து வந்தது.

ஒவ்வொரு நாளும் சிங்கம் தன் வேலையைச் செய்து முடித்தவுடனே, கழுதையைக் கண்டுபிடிக்கலாமென்ற எண்ணத்துடனே கொஞ்சநேரம் வெளியிலோடித் தேடிவரும். ஒரு நாள் சில வர்த்தகர்கள் தம் ஒட்டகங்களை வரிசையாக வோட்டிக்கொண்டு, கழுதையால் வழி காட்டப்பட்டு வருவதைச் சிங்கம் கண்களிக்கக் கண்டு, தன் பழைய சிநேகிதனைத் தெரிந்துகொண்டது. அச்சிங்கம் உடனே அவ்வர்த்தகர்கள் மேற்பாய்ந்து, அவர்களுக்கும், அவர்களுடைய ஒட்டகங்களுக்கும் ஒரு தீங்குஞ் செய்யாமல், அவர்களைப் பயமுறுத்திக்கொண்டே ஸெயின்ட் ஜெரோம் காண அவரிருந்த மாதா கோவிலுக்கு வரும்படிச்செய்தது. வியாபாரிகள் மிகவும் பயந்து தங்கள் குற்றத்தை யொத்துக்கொண்டார்கள். கழுதை மறுபடியும் மாதாகோவிலுக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டது. அதனுடைய நற்குணத்துக்காகவும், புத்திசாலித் தனத்துக்காகவும் சிங்கம் கொண்டாடப்பட்டு மிகவும் பக்ஷமாக நடத்தப்பட்டது. பிறகு ஸெயின்ட் ஜெரோம் இறந்தபொழுது அச்சிங்கமும் அவருடைய சமாதிக்குச் சென்று அங்கு ஆகாரமில்லாமற் கிடந்து தானும் இறந்தது.

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்." மத்தேயு 5 : 7.

ஸெயின்ட் ஜிலோம் பிர்மேட்.

(SAINT GUILLAUME FIRMAT.)

மிருகங்கள் பயங்காலிகளான பறவைகளும் சிறிதும் பயமின்றி ஸெயின்ட் ஜிலோம் பிர்மேட் என்னும் பெரியாரிடஞ் சென்றன என்றும், சிறு பிராணிகள் குளிரினலோ அல்லது ஆபத்துவேளைகளிலோ அவர் உடையின் கீழ்ப்பதுங்கி யிருந்தன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அவர் தம் குடிசையின் அருகிலுள்ள குளத்திலுள்ள மீன்களோடும் விளையாடுவார். அவைகள் சிறிதும் அஞ்சாதபடி அவர் தம் கைகளினல் எடுத்து அவைகளுக்கு ஆகாரமும் கொடுத்தார்.

"கர்த்தர் மிருக ஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங் கொடுக்கிருர்." சங்கீதம் 147 : 9.

பதுவைச்சார்ந்த
ஸெயின்ட் அந்தோனியார்.

(SAINT ANTONY OF PADUA.)

பதுவைச்சார்ந்த ஸெயின்ட் அந்தோனியார் ஜனங்களுக்குப் போதித்தபொழுது ஜனங்களால் பரிகசிக்கப்பட்டதாகவும், ஒருவரும் அவருடைய போதனையைக் கவனிக்காது சென்றதாகவும் கூறியிருக்கிறது. பிறகு அவர் கடற்புறமாகத் திரும்பி, "ஒ கடல் மீன்களே! ஒ ஆற்று மீன்களே!! நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் கடவுளின் கட்டளையை இதுவரையில் மனிதரிடங் கூற, அவர்கள் கேட்பதற்கு மறுத்துச்சென்றுவிடவே, நான் உங்களிடம் அதைச் சொல்லவந்திருக்கிறேன். புயற்காற்ருேடு கூடிய மழையிலிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ளும்படி ஆழமான சமுத்திரம் உங்களுக்குக் கொடுத்தவர் கடவுளே; அலைகளுக்கு

எதிரே வேகமாக நீந்திச்செல்லும் பலத்தையும் சக்தியையும் உங்களுக்கு அருளியவர் அவரே ; நாளுக்குநாள் அமிதமான

ஆகாரத்தை யுங்களுக்குத் தயாரித்துக் கொடுப்பவரும் அவரே ; யோனை என்னும் தீர்க்கதரிசியைச் சுமந்து செல்லும் சுதந்திரத்தை உங்களுக்குத்தான் அவர் தந்தார்" என்று உரத்த குரலில் கத்தினர். அவர் பேச்சின் சப்தத்தைக் கேட்டவுடன் அடுக்கடுக்கான சிறிதும் பெரிதுமான மீன்கள் தண்ணீரைப் பிளந்து கொண்டு ஒன்று சேர்ந்து அவர் பேச்சுக்களைக் கேட்கக்கூடின.

"கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர் ; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலு முள்ளது."
சங்கீதம் 145 : 9.

ஸெயின்ட் ஆன்ஸலம்.

(SAINT ANSLEM.)

ஸெயின்ட் ஆன்ஸலம், ஹீவ்ஸ் என்னும் தமது கிராமத்திலுள்ள வீட்டைநோக்கிக் குதிரையின்மேல் சவாரி செய்து கொண்டிருந்தார். அவர் தம்மோடு அழைத்துச் சென்ற பிள்ளைகள் அவர்கள் வழியைக் கடந்த ஒரு முயலின்மேல் நாய்களைத் தூண்டிவிட்டார்கள். அம்முயல் பயந்து ஓட முடியாமல் ஸெயின்ட் ஆன்ஸலம் ஏறிச்சென்ற குதிரையின் கால்களுக் கிடையில்வந்து நின்றுவிட்டது. அவர் அப்பரிதாபமான முயல் பயந்து தம்மிடம் அடைக்கலமாக வந்ததென்று அறிந்து, கடிவாளங்களை யிழுத்துக் குதிரையை நிறுத்திவிட்டார்.

நாய்கள் முயலைச் சூழ்ந்துகொள்ள, அது கண்ட பிள்ளைகள் சந்தோஷத்தாற் சிரித்தார்கள். ஆனால் ஸெயின்ட் ஆன்ஸலம் "பிள்ளைகளே! நீங்கள் சிரிக்கிறீர்களா! இவ்வெளிய பிராணியைப் பார்த்துச் சிரிக்குஞ் சமயமா இது!" என்றார். பிறகு அவர் அப்பிள்ளைகளை நாய்களைத் திருப்பிக் கூப்பிடும்படி செய்து, அம்முயலைத் தப்பிப்போக விட்டார்.

"நீதிமான் தன் மிருக ஜீவனைக் காப்பாற்றுகிறான்."
நீதிமொழிகள் 12: 10.

ஸெயின்ட் காட்ரிக்.

(SAINT GODRIC.)

ஸெயின்ட் காட்ரிக் என்பவர் பாம்புகளாற் சூழப்பட்டுப் படங்களிற் காணப்படுகிறார்; ஏனென்றால், அவரை ஒரு பிராணியும் எப்பொழுதும் வருத்தினதில்லையெனக் கூறப்பட்டிருக்கிறது. மேலும், அவர் வேட்டையாடப்பட்ட மிருகங்களுக்கெல்லாம் போஷகராக இருந்தார். ஒரு சமயம் சில கிராமத்தார் அவரது குகைக்கருகிலுள்ள காடுகளில் வேட்டையாடிக்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு அழகுள்ள கலைமான் வேட்டை நாய்களாற் கொடுமையாகத் துரத்தப்பட்டு மரங்களுக்கிடையில் நுழைந்து மனதிலும் உடலிலும் மிகத் துன்பத்தோடு அவரது குகையில் நுழைந்து அடைக்கலம் புகுந்தது. அந்தப் பெரியார் அதைக் குகையினுள்ளே அழைத்துக்கொள்ள, அது அவர் பாதங்களிற் படுத்துக்கொண்டது. வேட்டைக்காரர்கள் அங்கு வந்து 'மான் எங்கே?' என்று கேட்டதற்கு, 'கடவுளே அறிவார்,

என்று ஸெயின்ட் காட்ரிக் பதிலளித்தார். அது கேட்ட அவ்வேட்டைக்காரர்கள் அதிசயிக்கும்படி, அத்துறவியின் கந்தைகளின்கீழ் ஓர் தேவதை யிருக்கக் கண்டு, மானுக்குத் தீங்கு செய்யாமற் சென்றனர். ஸெயின்ட் காட்ரிக் அம்மிருகத்தின் பயந் தெளியும் வரையில் அதைத் தமது குகையிலேயே வைத்துக்கொண்டிருந்து பிறகு வெளியில் விட்டார். அது முதல் அம்மிருகம் அடிக்கடி அப்பெரியாரைக்கண்டு தனது அன்பை வெளிக்காட்டி வந்தது. இன்னம் பல கொடிய துன்பமடைந்த மிருகங்களும் அவர் ஆதரவில் இருந்தன. குளிர்க்காலங்களில் சிறு பறவைகளும் உஷ்ணம் பெறுவதற்காக அவர் மார்பின்மேல் தங்கியிருந்தன.

"மனு புத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் ஓரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது; எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது."

பிரசங்கி 3 : 19-20.

ஸெயின்ட் மாலோ.

(SAINT MALO.)

ஸெயின்ட் மாலோ ஐந்தாவது நூற்றாண்டிலிருந்த ஒரு துறவியாவர். அவர், இப்போது பிரடனியில் ஸெயின்ட் மாலோ என்று கூறப்படும் பட்டணத்துக்கருகில் தமது ஆசிரமத்தை யமைத்துக்கொண்டார். அவருக்கும் மற்றவருக்கும், பல வருஷங்களாகக் காட்டிலிருந்து நன்றியோடு விறகு சுமந்துவந்து மிக உபயோகமாகவிருந்த கழுதையின் ஞாபகத்துக்காக, அம்மிருகத்தோடு அவர் இருப்பதாகப் படங்களிற் காணலாம். ஒரு நாள் சில மனிதர், 'ஓநாய் ஒன்று அக்கழுதையைக் கொன்றுவிட்டது' என்று அவரிடம் கூறினார்கள். அதுகேட்ட ஸெயின்ட் மாலோ மிகவருந்தி, 'நமக்குத்தீங்குசெய்த அந்த ஓநாயைக்காணலாம் வாருங்கள்' எனக்

கூறினார். உடனே அவர் அம்மனிதர்களோடு காட்டிற்குச் சென்று உரத்த குரலில் ஓநாயைக் கூப்பிட, அவ்வோநாயும், தான் செய்த குற்றத்தை யுணர்ந்து, வாலை யாட்டிக் கொண்டும், அவர் கைகளை நக்கிக்கொண்டும் பாதங்களிற் பணிவோடு வந்தது. பிறகு அத்துறவி அவ்வோநாயை நோக்கி, ‘சகோதரனாகிய ஓநாயே! நீ எங்களுக்கு உபயோகமாயிருந்த கழுதையைக் கொன்று விட்டாய்! ஆதலால் அதனுடைய வேலையை நீ செய்ய வேண்டும்’ என்று கூறி, அருகிலிருந்தவர்களை நோக்கி, ‘இதன்மேல் விறகுச் சுமையை யேற்றுங்கள்’ என்றனர். ஓநாய் அத்தொழிலை மிகப் பணிவோடு ஏற்றுக்கொண்டு, கழுதையின் வேலையை அன்றுமுதல் செய்துவந்தது.

பிறகு மாலோ தமது விரோதிகளால் துரத்தப்பட்டுத் தனிமையாகச் சில நாள்கள் வாழ நேர்ந்த காலத்திலும் அவ்வோநாய் அவருடன் சென்றது. அது வீட்டில் வாழும் மிருகங்களின் தன்மையை நன்கு பெற்று, கால்நடைகளையும் மனிதர்களையும் காவல் நாயைப்போற் காத்துவந்தது.

“உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால் அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவி செய்வாயாக.” யாத்திராகமம் 23 : 5.

ஸெயின்ட் கைல்ஸ்.

(SAINT GILES.)

ஆதென்ஸ் தேசத்தைச் சேர்ந்த கைல்ஸ் என்பவர் பிரான்ஸை யடைந்து துறவியாகி அங்குள்ள இஸ்மிஸ் என்ற வனத்தில் வாழ்ந்து வந்தார். இஸ்மிஸ் வனம் மிகப் பிரசித்தி பெற்றது. ஏனெனில், பிரான்ஸ் தேசத்தில் நடக்கும் எருதுச் சண்டையைக் கண்டித்து எழுதியவர் ஒரு இஸ்மிஸ் பாதிரியார்.

ஸெயின்ட் கைல்ஸ் அவ்வனத்திலுள்ள மிருகங்களிடம் மிகுந்த நட்புக்கொண்டவர். ஒருநாள் ஓர் அரச குமாரன் ஸெயின்ட் கைல்ஸுக்குப் பிரியமான மானொன்றை வேட்டையாட, அது அத்துறவியிடம் பாதுகாப்புக்காக ஓடியது. துறவியைப் பார்க்காமல் அரச குமாரன் மான்மேல் அம்பொன்று தொடுத்துவிட, அச்சமயத்தில் ஸெயின்ட் கைல்ஸ்

அதைத் தம் கையால் தடுத்துவிட்டார். அரச குமாரன் ஸெயின்ட் கைல்ஸுக்குத் தீங்கு செய்துவிட்டதை யறிந்து மிக வருந்தி அவரைப் பணிந்து தன் குற்றத்தை மன்னித்துக் கொள்ளும்படி வேண்டினான். அத்துறவியும் அவனை மன்னித்து, இனி அம்மாதிரியான கொடிய வேட்டைத் தொழில்களைச் செய்வதில்லை என்று சத்தியம் செய்யும்படி செய்தார்.

"சகல காட்டு ஜீவன்களும் பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். மலைகளிலுள்ள பறவைகளெல்லாம் அறிவேன். வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள்."

சங்கீதம் 50 : 10-11.

ஸெயின்ட் ஹியூபர்ட்.

(SAINT HUBERT.)

கீழ் நாடுகளைப்போல மேல் நாடுகளிலும் நாய்களைப் போஷிக்கும் தெய்வங்களும் ஆதரிக்கும் துறவிகளுமுண்டு. தென் ஐரோப்பாவில் செயிண்டு யூஸ்டெசும், வட ஐரோப்பாவில் செயிண்டு ஹியூபர்டும் நாய்களின் போஷகர்களெனக் கூறப்படுகிறார்கள்.

செயின்ட் ஹியூபர்ட் என்பவர் மிகுந்த வேட்டைப் பிரியர். அவர் மிக விருப்பமான அத்தொழிலுக்காகத் தமது மதசம்பந்தமான வேலைகளிலும் ஊக்கங் கொள்ளவில்லை. ஒரு புதுவெள்ளிக்கிழமை (Good Friday) யன்று அவர் தமது சிறந்த ஜாதியிற்பிறந்த வேட்டை நாய்களோடு வேட்டையாடிக்கொண்டிருந்தார். அப்போது அவர் ஒரு கலைமானை யெதிர்ப்பட்டார். அக்கலைமானின் கொம்புகளுக்கிடையில் கிறிஸ்துவின் சிலுவை இருப்பதாகக் கண்டார். அச்சிலுவை தமது தெய்வசக்தியோடு தம் தொழிலைக் கண்டித்து, அதிலிருந்து திருந்தும்படி பயமுறுத்துவதாகவும் அவருக்குத் தெரிந்தது. அதனால் அவர் கடவுளின் கோபத்துக்குப் பயந்து அன்று முதல் தம் வேட்டைத்தொழிலை அடியோடு விட்டுவிட்டார்.

அவ்வாறு பழைய குணங்களிலிருந்து திருத்தப்பட்ட அவர், பின்பு ஓர் மாதாகோவிலிற் புகுந்தார். அவர் அதற்குப் பிறகு ஒரு சாதியாருக்குக் குருவாகி விட்டார். செயின்ட் ஹியூபர்ட்டினுடைய திருவிழா இன்றும், நொவம்பர் மாதம் 2-ந்

தேதியன்று கொண்டாடப் பட்டு வருகிறது. திரளான யாத்திரிகர்கள் தங்களுக்கும் தங்கள் மிருகங்களுக்கும் ஆசீர்வாதம் பெறும்பொருட்டு அவருடைய கோயிலுக்குச் சென்று கூடுகின்றார்கள்.

"நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சைப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" மத்தேயு 7 : 2-16.

ஸெயின்ட் பிரான்ஸிஸ்.

(SAINT FRANCIS OF ASSISI.)

மேற்கூறிய துறவிகளில், மிருகங்களையும் பட்சிகளையும் "சிறு சகோதர சகோதரிகளே!" என்று அன்போடு அழைத்த இத்தாலியா தேசத்து அஸிஸி நகரத்துப் பிரான்ஸிஸ் என்ற அன்பு நிறைந்த துறவியை ஒருவரும் மேற்பட்டிருந்தவரில்லை. அவர் எழுநூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர்.

தங்களுடைய புத்திரர் எல்லாச் செல்வங்களையும், அழகிய பட்டு வஸ்திரங்களையும், விநோதமான சிநேகிதர்களையும் விட்டுப் பரிதாபமான ஏழைகளுக்கு நல்லொழுக்கத்தைப் போதிக்கச்செல்ல விரும்பியதைப் பார்த்து அவருடைய பெற்றோர் வருந்தினார்கள். அவர் சிறிய பிராயத்திலேயே தமது வீடுவாசல்களைத் துறந்து, கையிலோர் காசுமில்லாமல் ஓர் நீண்ட பழைய சட்டையோடு வெளியிற் புறப்பட்டார்.

ஏனென்றால், தாம் எத்தகைய மனிதரிடையில் வசிக்க நினைத்தாரோ, அதற்கு ஏற்றபடி ஏழையாகவேயிருக்க விரும்பினார்.

ஸெயின்ட் பிரான்ஸிஸ் ஒவ்வோரிடமாகப் போதித்துக் கொண்டு சென்றபோது, தம்மிடமுள்ள எளிமைக் குணத்தாலும் விரும்பத்தக்க அன்பினாலும் ஏதேன் தோட்டத்திலிருந்த (Garden of Eden) ஞானமுதிர்ச்சிக்கும் தெய்வத்தன்மைக்கும் அனேகமாகத் திரும்பிவிட்டாரென்றே சொல்லக்கூடியதாயிருந்தது. ஏனென்றால், அவர் எல்லா மிருகங்களையும் தெய்வத்தன்மை பொருந்தியனவாகவே கண்டார். அவைகளும் தங்கள் முறையில் அவரிடம் கீழ்ப்படிந்திருந்தன. சிறு பறவைகள் அவர் கைகளில் வந்து உட்காரும்; எல்லா மிருகங்களும் அவர் கூப்பிட்டபோது அவரிடம் ஓடிவரும். நாய், ஓநாய், முயல்கள், புறாக்கள், மீன்கள், பறவைகள் முதலிய பிராணிகளும் அவரிடம் அடைக்கலமாகப் புகுந்தன என்று கூறப்பட்டிருக்கிறது. அவர் அவைகளோடு சேர்ந்து அவைகளின் குற்றங்களைத் திருத்தித் தமது சொந்த சகோதர சகோதரிகளைப்போல் அன்பாகவும் நன்றாகவும் நடத்தினார். அவர் எப்பொழுதும் துஷ்ட மிருகங்களுக்குப் பயப்பட்டதே கிடையாது. அவைகளும் அதற்கேற்ப அவரை நம்பியிருந்தன.

ஓரூரிற் புகுந்து ஆடுமாடுகளை யழித்து அவ்வூரிலுள்ளவர்களை நஷ்டப்படுத்திப் பயப்படுத்திவந்த ஒரு பெரிய ஓநாயின் வரலாற்றைக் கேள்விப்பட்ட ஸெயின்ட் பிரான்ஸிஸ் காட்டுக்குச் சென்று அதைக் கூப்பிட்டு, அதன் கொடிய செயல்களை யெடுத்துக் கூற, அந்த ஓநாயும் அன்பாக வாலை யாட்டிக்கொண்டு அவரிடம் ஓடிவந்து, ஒரு பெரிய நாயைப் போல் அவரைத் தொடர்ந்து சென்றது. அவ்வோநாய் அவருக்கேதாவது தீங்கு செய்யக்கூடுமென்று அவ்வூரார் பயந்தார்கள். ஆனால், ஸெயின்ட் பிரான்ஸிஸ் அவர்களைப் பார்த்து, "சகோதரனாகிய ஓநாய் உங்களுக்கு இனித் தீங்கு செய்யாது; அதனால் அதைப் பார்த்துப் பயப்பட வேண்டாம்" என்றும், "அதுவும் ஜீவிக்கவேண்டியிருத்தலால் அதற்குத் தினந்தோறும் தீனி கொடுக்கவேண்டும்" என்றும் வேண்டிக்கொண்டார். அவ்வூரார்களும் தங்கள் ஆகாரத்தில் மிகுதியானதைச் சகோதரனான ஓநாய்க்கென்று மீற்றிவைக்க, அதுவும் சென்று ஆகாரத்தைத் தின்று, வீட்டைக் காக்கும் நாயைப்போல அவ்வூரார் ஆடு மாடுகளைத் துஷ்ட மிருகங்கள் திருடிக்கொண்டு போகாதபடி அநேக வருஷ காலம் பாதுகாத்து வந்தது.

ஒரு தடவை அவர் பெவக்ன என்ற இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபொழுது, மரங்களில் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்த பல பக்ஷிக்கூட்டங்களிடையே சென்றார். அவர் அவைகளைக் கண்டு தம்மோடு வந்தவர்களை நோக்கி "நான் சிறிய சகோதரிகளாகிய பக்ஷிகளுக்குப் போதித்து வருமளவும் சிறிது நில்லுங்கள்" எனச்சொல்லிப் பிறகு அவர் பக்ஷிகளைப் பார்த்துப் பின்வருமாறு பேசத் தொடங்கினர் :—

"என்னுடைய சிறிய சகோதரிகளே! நீங்கள் உங்களைப்படைத்த கர்த்தருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறீர்கள். எப்பொழுதும் எல்லாவிடங்களிலும் நீங்கள் அவர் ஸ்தோத்திரரூபமான பாடல்களையே பாடவேண்டும். ஏனென்றால், அவர், குளிர்ச்சியானதும், நிர்மலமான காற்றையுடையதுமான ஆகாயத்தில் பறந்து திரிய உங்களுக்கு இறக்

கைகளைக் கொடுத்திருக்கிறார். நீங்கள் நெய்யாமலும் தைக்காமலும் இருக்கும்போதுகூட அவர் உங்களுக்கும் உங்கள் குஞ்சுகளுக்கும் ஒரு போர்வையாக இறகுகளைக் கொடுத்திருக்கிறார். நீங்கள் பூமியில் அழியாதிருக்கும் பொருட்டுத் தேவன் உங்களினத்தில் இரண்டை, நோவாவின் பேழையில் அனுப்பினார். நீங்கள் விதைவிதைக்காமலும் அறுவடை செய்யாமலும் இருக்கும்போதும் அவர் உங்களுக்கு ஆகாரம் அளிக்கிறார். நீங்கள் தாகத்தைத் தணித்துக்கொள்ள ஊற்றுக்களையும், நதிகளையும், கூடு கட்டிக்கொள்ள மரங்களையும் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார். எனது சிறு சகோதரிகளே! நன்றி மறக்கும் பாவத்தைப் பற்றி ஜாக்கிரதையாக இருப்பதோடு கர்த்தரைத்துதியுடன் பாடிக்கொண்டாடுங்கள். அவரைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம் பண்ணுங்கள்."

அவர் போதித்தபோது பறவைகளெல்லாம் தங்கள் அலகுகளைத் திறந்து, கழுத்துக்களை நீட்டி, இறகுகளை யடித்துக்கொண்டு தலையைப் பூமியில் தாழ்த்தின. பிறகு அவைகளெல்லாம் தங்களுக்குள் நான்கு சமமான தொகுதிகளாகப் பிரிந்து சிலுவைபோலக் காணும்படியாக நான்கு புறமாகப் பறந்து ஓடின.

ஒரு நாள் ஒரு சிறுவன் பலவகைப்பட்ட புறாக்களைப் பிடித்துச் சந்தைக்கடைக்கு எடுத்துச்சென்றதை ஸெயின்ட் பிரான்ஸிஸ் பார்த்தார். சிறு பிராணிகளிடம் அளவற்ற அன்பைக்கொண்ட ஸெயின்ட் பிரான்ஸிஸ் அப்புறாக்களைப் பரிதாபத்தோடு பார்த்து, அச்சிறுவனை நோக்கி, 'ஓ நல்ல சிறுவனே! அவைகளைத் தயவுசெய்து என்னிடம் கொடு; பறவைகள் சிறு பிராணிகளாக இருந்தாலும், அவைகள், கற்பும், வணக்கமும், நன்றியுமுள்ளனவாக வேத புத்தகங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அப்பறவைகள் கொடிய மனிதர்கள் கையில் அகப்பட்டு அவர்களாற் கொல்லப்படுகின்றன என்று' கூறினார். உடனே அச்சிறுவன் தெய்வ அருளால் நல்லறிவு பெற்று, அப்பறவைகளைப் பிரான்ஸிஸ் கையிற் கொடுத்துவிட்டான். அவர் அவைகளைத் தம் மார்போடு அணைத்து,

'எனது அன்பார்ந்த சிறு சகோதரிகளே! ஏ சாதுத் தன்மையும், கற்பும் நிறைந்த புறாக்களே! நீங்கள் எவ்வாறு அச்சிறுவனிடம் அகப்பட்டுக் கொண்டீர்கள்? இப்பொழுது நான் உங்களை மரணத்திலிருந்து காத்து உங்களுக்கு வேண்டிய கூடுகளை யமைத்துத் தருகிறேன்; நீங்கள் தேவன் கட்டளைப்படி பெருகிச் சௌக்கியமாக வாழ்ந்திருங்கள்' என்று கூறினர். பிறகு அவர் அவைகளுக்கெல்லாம் கூடுகள் அமைத்துக்கொடுக்க, அவைகளும் முட்டையிட்டுக் குஞ்சு பொறித்து, ஸெயின்ட் பிரான்ஸிஸ் ஸூம் அங்குள்ள மற்ற துறவிகளும் மகிழ்ச்சியடையும்படி பழகி வாழந்து வந்தன. அவைகள் சிறிதும் பயமின்றி அவர்கள் கையிலுள்ள ஆகாரத்தை யருந்தின. ஸெயின்ட் பிரான்ஸிஸ் ஆசீர்வதித்து அனுப்பும் வரையில் அவைகள் அவ்விடத்தைவிட்டுச் செல்லவே இல்லை. அவர் மறுபடியும் அச்சிறுவனைக் கண்டு அவனை நோக்கி, 'குழந்தாய்! நீ ஒரு சிறந்த துறவியாகி இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து எங்களைப்போல் நடக்கவேண்டும்' என்று கூறி, அப்பறவைகளை அவனிடம் ஒப்புவித்தார். அன்று முதல் அச்சிறுவனும் அவர் கட்டளைப்படி துறவியாகி மிகுந்த பரிசுத்தமான வழிகளை யனுசரித்து வரத்தலைப்பட்டான்.

அவருக்கு மிகச் சிநேகமான 'சகோதரி வானம்பாடி' ஒன்று இருந்தது. அதனிடத்தில் அவருக்கு மிகுந்த வாற்சல்யமுண்டு.

பொதுவாய்ப் பறவைகளிடம் இருந்த பேரன்பினல், அவர் அரசரைக்கண்டு, 'மனிதர்கள் எப்படி கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது விருந்து உண்டுகளிப்பார்களோ அவ்விதமாகவே பறவைகளுங் களிக்கும்பொருட்டு அவைகளுக்குத் தெருக்களிலும் கோட்டைகளைச்சுற்றிலும் தானியங்கள் இறைக்கப்படவேண்டுமென்றும், மிருகங்களின் கொண்டாட்டத்துக்கும் ஒரு நாள் ஏற்படுத்தப்பட வேண்டும்' என்றும் கட்டளைகளைப் பிறப்பிக்கும்படி கேட்க விரும்பினர்.

மற்றொரு சமயம் அவர் ஓர் பாதையின் வழியாய்ச் சென்றபோது வழியிலுள்ள புழுக்களெல்லாம் மிதிபட்டு இறக்காதபடி காப்பாற்ற அவைகளை ஒன்று சேர்த்தார்.

கடைசியில் அவர், தமது இடைவிடாத போதனைகளாலும், பல விடங்களுக்கு அலைந்ததனுலும், மிகுந்த சிரம மடைந்து, தனிமையான ஒரு மலைக்கு இளைப்பாறச் சென்ருர். அங்கு அவருக்காக ஓர் குடிசை கட்டித் தரப்பட்டது. அங்குப் பல பறவைகள் இனிமையான பாடல்களைப் பாடிக் கொண்டும், கூட்டங் கூடிக்கொண்டும் வந்தன. காட்டு மிருகங்களும் சந்தோஷமாக வாலை யாட்டிக்கொண்டு அவர் பாதங்களில் உட்கார்ந்தன. ஸெயின்ட் பிரான்ஸிஸ் உலக முழுவதையும் சூழ்ந்துள்ள கடவுளின் அன்பைப்பற்றி அவைகளோடு பேச, அவ்வன்பு கடவுளால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பிராணியின் மனதிலும் அவைகளை யறியாமலே பதிந்துவிட்டது.

சில சமயங்களில் அவர் கடவுளைத் தோத்திரம் செய்வதற்காக லாவெர்னியா என்னும் நிர்மானுஷ்யமான மலைக்குச்செல்வது வழக்கம். அப்போது ஒவ்வொரு காலையிலும் அவர் நேசித்த வல்லூறு ஒன்று அக்குகைவாயிலில் தன்னிறகுகளை யடித்துத் தியானஞ் செய்வதற்காக அவரை தூக்கத்திலிருந்து யெழுப்பி வந்தது. பகல் வேளையில் அப்பறவை அவரது தனிமையை மனங்களிக்கச்செய்யும் இன்பத்தினுற் போக்கி வந்தது.

இப்படிப்பட்ட சினேகமாகிய உறவோடு மேற்கூறிய கிறிஸ்துவத்துறவிகள் வீட்டு மிருகங்களோடும் காட்டு மிருகங்களோடும் வசித்தது, "ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான் ; உலகத்திலுள்ள எல்லா ஜீவன்களுக்கும் பரஸ்பர சமாதானம் உண்டாகும்" என்ற ஏசாயாவின் வார்த்தைகளை உண்மைப்படுத்தித் திருஷ்டாந்தமாகவுங் காட்டியது.

" ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள் ; அவைகள் விதைக்கிறதுமில்லை ; அறுக்கிறதுமில்லை ; களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை ; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிருர். மத்தேயு 6-26.

"நம் பரம பிதா இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல அவருடைய பிள்ளைகளாகிய நாமும் இரக்கமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று இயேசு போதிக்கிறார்."

லூக்கா 6 : 36.

"அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும் பால சிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை." ஏசாயா 11 : 6-9.

முடிவுரை.

சிறுவர்களே! சிறுமிகளே!!

இதுவரையிற் படித்த கதைகளினால் நீங்கள் அறிந்து கொள்வதென்ன?

நம்மைப்போலவே மிருகங்களும் கடவுளாற் படைக்கப் பட்டவைகளே; அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டே உலக பிதாவாகிய கடவுளால் இவ்வுலகத்தில் உண்டாக்கப்பட்டிருக்கிறது. நம்மைப்போலவே அவைகளும் பாது காப்புக்கும் அன்பான நடத்தைக்கும் உரிமை பெற்றிருக்கின்றன.

பிராணிகளிடம் அன்பாக விருப்பது கடவுளாற் பரிசளிக்கப்படுகிறது. அவைகளிடம் கொடுமையாக விருப்பது அவரால் தண்டிக்கப்படுகிறது. பிராணிகளிடத்தில் அன்பு காட்டுதல் ஒருவனை மேன்மைப்படுத்துகிறது; அதற்கு மாறாக கொடுமையோ அம்மேன்மையைப் போக்கி அவனை இரக்கமற்ற கொடியவனாக்குகிறது.

ஆகையால் நீங்கள் நமது கருணைக் கிலக்காகியுள்ள மிருகங்களின்மேல் இரக்கங்கொள்ளவேண்டும். ஏனென்றால், அவைகள், தம்மைக் காத்துக்கொள்ளும் சக்தியற்றவைகளும், தங்கள் குறைகளை வாய்விட்டுச் சொல்லமுடியாதவைகளாயுமிருக்கின்றன. நீங்கள் இவ்விஷயங்களை அனுபவத்திற்குக் கொண்டுவந்து அதன்படி நடப்பீர்களானால், மேலான நீதியைத் தெரிந்துகொண்டவராவீர்கள்; அதாவது, உயர்பிறப்பினனாகிய மனிதன் தன்னைவிடச் சக்தியிற் குறைந்ததும், தற்காப்பற்றதுமானவைகளைப் பச்சாத்தாபத்துடன் பாதுகாப்பது. இன்னம் அது இத்துடன் நின்றுவிடவில்லை. 'மனிதன் மனிதற்குச் செய்யவேண்டிய கடமை' என்னும் மிக வுயர்ந்த நீதியையும் அது, கற்பிக்கக் காரணமாகிறது.

"கடவுளுடைய சிருஷ்டிகளாகிய தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் பேசவும் சக்தியற்றிருக்கிற எல்லாப் பிராணிகளையும் தன்னுடைய பாதுகாப்புக்குள்ளாக்கிக் கொள்ளாத எந்த நாகரீகமும் பூர்த்தியடைந்ததன்று."

—விக்டோரியா மகாராணியார்.

78077

சீவகா ருண்ய முள்ளான் செறியுயிர் நண்ப னுவான்
சீவகா ருண்ய முள்ளான் செகமதிற் றேவ னுவான்
சீவகா ருண்ய முள்ளான் செல்நிழல் உலகஞ் செல்லும்
சீவகா ருண்ய முள்ளான் தேர்பொருள் எல்லா மாகும்.

HUMANE EDUCATION:

A WIDE-FELT WANT.

" So in the Boy Scout and Girl Guide Movements we are making a special appeal to our million members against **cruelty to animals,** for it is in that direction that human cruelty first expresses itself."—*Lord Baden Powell.*

A Scout.

A Scout is a Friend to Animals.

A Guide is a Friend to Animals.

A Guide.

Remember the Dumb Animals
Be kind to them Always
Protect them from Cruelty;
is the message of

THE S. P. C. A., MADRAS.

Copies can be had from :—
The Superintendent, S. P. C. A., Vepery, Madras.